





# இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வேதனையும் சோதனையும் சாதனையும்

## 1948 – 2005

சர்வதேச தமிழர் கவிதைச் சிறப்பிதழ்

ஆசிரியர் : நல்லையா சண்முகப்பிரபு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்களின் முன்னேற்றம் ஐக்கியம், நீதி, சமாதானம், சமத்துவம், சுதந்திரம் பேணுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சர்வதேச தமிழர் கவிதைச் சிறப்பிதழ்

# இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் வேதனையும் சோதனையும் சாதனையும் 1948 – 2005

ஆசிரியர் : நல்லையா சண்முகப்பிரபு
B.Sc., Diploma in Journalism(London)

தமிழர்களின் முன்னேற்றம் ஐக்கியம், நீதி, சமாதானம், சமத்துவம், சுதந்திரம் பேணுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர் கருத்து

சுமார் 450 வருடங்களாக போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என வெள்ளையரின் காலனி ஆட்சி இலங்கையில் நடைபெற்று, 1948ல் சுதந்திரம் பெற்றாலும், இங்கு பல்லாண்டு காலமாக வாழ்ந்துவரும் தமிழ் பேசும் மக்களின் நிலை பல்வேறு மட்டங்களில் சோதனை-வேதனைகளைச் சந்தித்தே வந்துள்ளது. எனினும் தமிழ் பேசும் மக்கள் இத்தகைய தொடர் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் பற்பல சாதனைகளைப் புரிந்திருக்கிறார்கள் என்பதையும் மிகச்சிறப்பாகக் குறிப்பிடவேண்டும்.

1. மொழிஉரிமைகள், சட்டம், நீதி, நிர்வாகம், கல்வி, சுகாதாரம், நிலம்-நீர்ப்பங்கீடு, பாதுகாப்பு, காவல்துறை, ஊடகத்துறைகளிலும் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர்.

2. தொழில்,தொழிற்பயிற்சி, சமூக, கலாசார, சமய வாய்ப்புகளும் சிறுபான்மை மக்களுக்கு மிகவும் பாகுபாடான முறையிலேயே வழங்கப்பட்டுவந்தன.

3. மனித உரிமைகள், அரசியல் உரிமைகள்- வாய்ப்புக்கள், சமூக உரிமைகள் என்பனவும் இனத் துவேசம், பாகுபாடு காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டன.

4. உயிர்க் கொலைகள், உடைமைகள் அழிப்பு, திட்டமிட்ட நிலப்பறிப்பு, திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், உடல்-மனரீதியான தூஷணைகள், பயமுறுத்தல்கள் எனப் பல்வேறு துன்பங்களையும் தமிழ்பேசும் மக்கள் சந்தித்திருக்கிறார்கள்.

5. பல தமிழ் பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாக மாறியிருக்கின்றன. தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள அதிபர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

6. 1958, 1977, 1981, 1983, 1985 என பல ஆண்டுகள் தமிழ் பேசும் மக்களுக்கு எதிராக இனவெறித் தாக்குதல் திட்டமிட்டு காடையர்களால் அரசியல் கட்சிகளின் பின்னணியில் அரசியல்வாதிகளின் தூண்டலால்,படை உதவியுடன் சிங்களப் பகுதிகளில் இடம்பெற்றன.

7. போக்குவரத்து சாதனங்களான ரயில், பஸ்களில் இரவு-பகல் எனப்பாராது சிங்களக் கொலைவெறியர்கள் படுகொலைகளையும், கொள்ளைகளையும் செய்த வரலாறும் உண்டு.

8. புலம்பெயர்தமிழர் தம்உறவுகட்கு என அனுப்பிய உதவிப்பணங்கள் கூட நடுவழியில் திருடப்பட்ட பல வேதனைச்சம்பவங்கள் செய்திகளாக வந்துள்ளன.

இவை அனைத்திலும் பல சோதனைகளையும், வேதனைகளையும் சந்தித்த தமிழ் பேசும் மக்கள் (இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர், இஸ்லாமியத் தமிழர்) பல சாதனைகளைப் பொருளாதாரம், அரசியல், சமயம், சமூகம், வர்த்தகம், பாதுகாப்பு, விளையாட்டு, கல்வி, ஏற்றுமதி-இறக்குமதி, தகவல் தொழில்நுட்பம், ஊடகத்துறை, மேற்கு நாடுகளில் குடியேற்றம்,பயணம் எனப் பல்வேறு முறைகளில் வியக்கத்தக்க சாதனைகளையும் செய்துள்ளார்கள்.

புலம்பெயர்ந்த தமிழ்பேசும் மக்களும், அவர்தம் பிள்ளைகளும் உயர்கல்வி, தொழில், வர்த்தகம், ஊடகத்துறை, உல்லாச-புனிதப் பயணத்துறை, சமயம் எனப் பல்வேறு துறைகளிலும் சாதனைகளைப் புரிந்ததுடன் தாய்நாட்டுத் தமிழர்கள் முன்னேற்றவும் ஒற்றுமைப்படுத்தவும் சுதந்திரமாக சீவிக்கவும், நீதி-அமைதிபெறவும் உதவிவருகிறார்கள். இந்தஅனுபவங்களை வரலாற்றுப்பதிவு செய்வது எம்கடமை! எம் உரிமை!எம் இலட்சியம்! இவற்றுக்கு உதவிய அன்புள்ளங்கள் அனைவருமே நன்றிக்குரியவர்கள் ஆவார்!

என்றும் அன்புடனும், மதிப்புடனும்......நல்லையா சண்முகப்பிரபு, திறம்மன், நோர்வே.

**Lyngveien-3B, 3041 Drammen, NORWAY.**
**Tel/Fax.004732813416, 91784271**
E-Mail: shanmugappirabunalliah@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் பேசும் மக்களின் வேதனையும் - சோதனையும் - சாதனையும் 1948 2005

## ஒளிமயமான எதிர்காலம்! ஒருமித்து கைகோர்ப்போம்!

1ம் பரிசுபெற்ற கவிதை (ரூபா 10,000)
கி.பாக்கியலட்சுமி (திருகோணமலை)

தேச விடுதலையின்றி தேன்தமிழர்
வேசதாரிகள் முன் விம்மியழுதததுவும்,
பாசப்பிறப்புக்களைப் பறிகொடுத்தும்
பாரில் பயந்து வாழ்ந்ததுவும்,
வாச முல்லைகளாய் மலர்ந்த மொட்டுக்களின்
வாழ்வு வரையறுக்கப் பட்டதுவும்,
வீசு புயலாய் மாறியெழுந்ததுவும், - இன்றும்
வீழாத் தமிழன் வரலாறே.

**வேதனையும் சோதனையும்:**

மலையகத் தமிழர் குடியுரிமை
மறுக்கப்பட்டது சுதந்திர ஆண்டுதனில், (1948)
சிலையென ஆன அவர் வாக்குரிமை
சீக்கிரம் பறிபோனது மறு ஆண்டு, (1949)
தலை நிமிர்ந்து தமிழன் என்று கூற
தடுத்தது சட்டம் "சிங்களம் மட்டும்" என, (1956)
விலைபோன வாகனங்களுக்கு
விரைவாய் பெயரிட்டனர் "சிங்கள சிறி" என, (1958)

நீதி மன்றங்களில் சிங்களம்
நிலையான மொழியல்லோ, (1960)
ஓதிக் கொடுத்தனர் மாணவர்க்கு
ஒரு பாடமாகவே அன்றதனை, (1960)
சேதி ஒன்று சொன்னது தரப்படுத்தலென
தேர்ச்சி அற்றனர் தமிழ் மாணவர்கள், (1970)
சோதியென மிளிர்ந்தது சிங்களமன்று
தோற்றமிழந்தது தமிழல்லோ

புதியதொரு அரசியல் யாப்பு
புகுத்தப்பட்டது அரசாலன்று, (1972)
சதியர் செய்த வேலையால் - அற்ப
சலுகைகளையும் இழந்தனர் தமிழர்அன்று
விதியென எண்ணினோம்
வேரூன்றியது பௌத்தம் அரச மதமாய்,
மதியர் தமிழை மிதித்தனர் அன்று
மாண்புடனேறியது சிங்களம் அரச மொழியாய்

ஆயுதப் போர் ஆரம்பமானது
அணிதிரண்டனர் தமிழர் துணிவுடனே
வாயடைத்து நின்ற தமிழினம்
வானினையும் அதிரச் செய்ததுவே,
கோயிலென்ன குளமென்ன தமிழர்
கூட்டம் வாழும் இடங்களெல்லாம்
ஓயுமெப்போ இந்த யுத்தம் - அந்நாள்
ஓடி விரைவில் வந்திடாதோ?

வடகிழக்கெங்கும் செல்வீச்சு அங்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்த தமிழர் நிலை என்னாச்சு,
கடலொடு படகு கவிழ்ந்தாச்சு
கதறியழுதவர் பகைவர் குறியாச்சு,
திடமாய் உலையில் அரிசியிட
திடீரென காலொன்று எற்றியது
விடமுண்ட கண்டனைத் தொழுதுநிற்க
விலங்கொன்று கைகளைப் பற்றியது

நாகர்கோவில் பாடசாலையில்
நாற்பத்தொருவர் குண்டுவீச்சில் பலி. (1994)
தாகம் தீர பலியெடுத்தான் - வந்தாறுமூலையில்
தாயக அகதியர் 158 பேரை. (1990)
வேகமுடனே விமானமொன்று குண்டு
வீசியது சென்பீற்றர்ஸ் தேவாலயத்துள், (1993)
நூதனமாய் நிலாவெளி நூலகத்துள் - சில
நொடிப்பொழுதில் படுகொலைகள் ஏராளம் (1985)

சென் பீற்றர்ஸ் தேவாலயத்துள்ளே
செவிப்பறையதிர ஒரே சத்தம்,
விண்மேவி வந்த புக்காரா விமானம்
வீழ்த்தியது குண்டுகளை அங்கல்லோ, (1995)
கண்ணீரில் கரைந்த 141 பேர்
காற்றோடு போயினரே,
மண்ணுக்காய் எழுந்த யுத்தம் - அன்று
தண்ணீரின்றித் தவிக்க விட்டதுவே.

மடுத் தேவாலயத்தில் எறிகணை வீச்சு
மறுநாள் மீட்டவை 42 தமிழர் சடலம், (1999)
படுமோசமான பாலியல் வல்லுறவால்
பாடசாலை மாணவி கிருஷாந்தி புதைகுழியுள், (1996)
கடுகதியில் ஊடகவியலாளர் நிர்மலராஜன்
கடிகாரம் வினாடியென கொலையானார், (2000)
திடுக்கிட வைத்தது தமிழரையன்று
திடீரெனநடந்த சிவராம் யோசப் பரா படுகொலை. (2005)

வழிபாட்டிடங்களில் தஞ்சம் புகுந்தோரை
வரிசையில் கிடத்தினான் சடலமாய்,
விழியிலே கண்ணீராய் விம்மியழ
வெட்டினான் இளம் சிட்டுக்களை,
கழிவான குப்பையில் போட்டு உயிருடன்
கருகிட எரித்தான் பெற்றோலிட்டு,
தளிராக நிமிர்ந்த மாணவரை
தடமின்றி மறைத்தான் பாடசாலை விட்டு.

**சாதனைகள்:**

மாண்டார் பல்லாயிரம் தமிழர்- இங்கு
மண்ணிலெஞ்சியோர் சோதனைக்குள்ளானார்,
மீண்டோர் அங்கே மிளிர்ந்தனர் முத்தாய்
மெருதுவாய் சாதனை நிலைநாட்டினர்,

ஆண்ட அரசு சற்று திரும்பியது
ஆழிக்குமரன் ஆனந்தன் செயல்கண்டு,
நீண்ட பாக்கு நீரிணை கடந்தான் - முதலில்
நிலையான சாதனை ஒன்பது படைத்தான்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லையில் அகிம்சா வழியில் படைத்தான்
நல்லதோர் சாதனை திலீபன்
கல்லையும் கரைந்திடச் செய்து முதற்
கரும்புலியானான் மில்லர்.
பல்கலை நூல் இயற்றுகின்றார்
பைந்தமிழில் எண்ணற்றோர்
வில்லையும் வளைத்த இராமனின்
வீரத்தை வென்றனர் எம்வீரர்.

நாட்டிலே அன்ரன் பாலசிங்கம்
நனிசிறந்த தத்துவாசிரியராம்,
பாட்டிலே நம் தேனிசை செல்லப்பா-இப்
பார்போற்றும் பாவலராம்,
தீட்டுவார் நல்ல கவிவரிகள்
தேசத்தில் "புதுவையுடன் காசி ஆனந்தனும்",
காட்டு விலங்கென நினைத்த கயவர் முன்
காட்டினரிவரெல்லாம் கலைச் சாதனைகள்.

நீதி நிர்வாகத்துடன் - மிகவும்
நேர்மையான சட்டமுறை,
வீதி ஒழுங்குகளும் - நல்ல
விமான ஓடு பாதைகளும்,
ஆதிமுறையிலிருந்து வளர்ந்த
அறிவியலின் கண்டு பிடிப்புகளும்,
சாதிக்கின்றார் தனிநாட்டுக் கட்டமைப்புடன்
தாயகத்தில் தேசியத் தலைவருமே.

ஒளிமயமான எதிர்காலமொன்று நாமும்
ஒருமித்து கை கோர்ப்போமிங்கு,
தெளிவோடு நீயும் நிமிர்ந்து நில்-எம்
தேசியத் தலைவர் வழிதனிலே,
குளிரோடு வாடைக் காற்று வந்து
குளிர்ந்திடச் செய்யும் தமிழ் உள்ளங்களை,
விழியோரம் ஆனந்த மழை பொழிய
வீரத் தலைவனை நாமும் போற்றி நிற்போம்.

• • •

AVIS RENT A CAR
Canada
KUGAN RASALINGAM
Agency Operator
ras@kugan
1345 Lawrence Avenue East
Scarborough, Ontario
M3A 1C6
Tel: (416) 441-1418
Fax (416) 441-3096
Reservation: 1-800-879-2847
Email: aviss52@allstream.net


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கூறமுடியா சோகக் கதைகள்

2ம் பரிசுபெற்ற கவிதை (ரூபா 7,000)
ஏ.ஜெயபாரதி (செங்கலடி, மட்டக்களப்பு)

எமக்கெல்லாம் சுதந்திரம் கிடைத்ததாய் சொன்னார்கள்
தமிழனுக்கு முள்முடி சூட்டி அவர் கைகளைப் பிணைத்த
நாள் அன்றைய நாளே- பண்டைய நாளிலே பண்டா
கொண்டுவந்தார் "தனிச் சிங்களம் மட்டும்" என்றதோர் சட்டம்.
தமிழர் வயிற்றில் மண்ணை வாரியதே இச்சதித் திட்டம்
பல்லாயிரம் தமிழர்கள் வேலையைப் பறித்தே
அவரை ஒடுக்கிட இனவாதிகள் போட்ட
அடக்குமுறையின் முதலாம் கட்டம்!

எழுபத்து நான்கினிலே எம் அமுதாம்- மொழியையே
ஆய்ந்திடவே கூட்டினர் ஓர் தமிழ் மாநாட்டை
தமிழ் வளர்ந்தால் தமிழனும் வாழ்வான்; உயர்வான்;
கருதியே மாநாட்டை வீசியே அழித்தனர் குண்டுகளாலேயே
தென் கிழக்காசியாவின் இரத்தினமாய் இலங்கையின் பொக்கிஷமாய்
யாழ் மண்ணின் இதயமாய் துடித்த எம் யாழ் நூலகத்தை
தீயினால் - கருக்கியே சிரித்தனர் அறிவற்ற மூடர்களே
இழப்பு முழு நாட்டிற்கே, அறியவில்லை அறிவிலிகள்!

தனித்து ஓர் பிரதேசத்தில் தமிழரையே வாழவிட்டால்
தானாகத் தோன்றிடுமே தனித்தமிழர் தாயகமே!
தடுத்திடவே செய்திட்டார் "திட்டமிட்ட சிங்களக்குடியேற்றங்களால்"
வடக்கிலே வெலிஓயா, கல்குளம், கிழக்கிலே அறந்தலாவ, சேருவில
என்றே ஓர் பட்டியல் அனுமார் வாலாய் நீள.... நாம்
அங்கிருந்தே துரத்தப்பட்டோம் வெட்டியும் சுட்டும் - இதனால்
ஈழத்தமிழன் வாழா தேசம் ஒன்றில்லை உலகில்
உலகத் தமிழர் கடல் கடந்தனரே மணம் பரப்பினரே!

தமிழனை அழித்தே அடக்கிட தீட்டினரே
சாதுரியமான சதிமுயற்சிகளையே சிங்கள
காடையர், காமுகர் கைகளில் "அவசரகாலச் சட்டம்"
என்றதோர் பெயரிலே வெற்றுக் காசோலைகள் - விளைவு
இளைஞர் படுகொலை இனத் துவேச வெறியாட்டம் - இன்னும்
கண்டு பிடிக்காத காணாமற்போனோர் பட்டியல் என நீள
இவர்களே கிருஷாந்திகள் பலரை புதைத்துருசிகண்டவர்கள்
யுத்தத்தை விதைத்தே விதவைகளை அறுவடைசெய்தவர்கள்!

அடித்தும் அழித்தும் பார்த்தனர் முடியவில்லை
சினங்கொண்ட சிறுத்தையாய் சீறினான் தமிழனுமே
இரந்தே அழைத்தனர் இந்தியப் படைகளையே
இரவிலும் பகலிலும் தமிழர்தம் கிராமங்கள் சுற்றிவளைப்பு
இளைஞர் கைதுகள் தடுத்தே வைப்புகள்
சந்தேகம் கொண்டவரை சித்திரவதை செய்தே சிறைவைப்பு
தடையின்றித் தொடர்ந்தன பாலியல் வன்முறைகளுமே
தமிழரை டாங்கியால் அரைத்தே அழித்தனரே!

யாழ் மண்ணுக்கோர் சிறப்பு முளைவிடும்
ஒவ்வொரு தமிழனும் ஞானத்தின் நெருப்பு!
பல்கலைக் கழகத்தின் அனுமதியை போட்டியிட்டே
பெறுவதில் அசகாய சூரர்கள் வைத்தியர் பொறியியலாளர்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அனைத்திலுமே யாழ் தமிழர் பெற்றாரே அதிக இடம்!

திடுக்கிட்டுத் திகிலடைந்தே வெட்டுப்புள்ளியை
உயர்த்தியே வைத்தனர் கல்விக்கு வேட்டுக்களையே
போரிட்டும் அழித்தனர் யாழ் மண் மசிந்திடவே

நொறுங்கின கட்டடங்கள், சிதைந்தன பாடசாலைகளே,
அழித்தனர் பயிர்களை,அடைத்தனர் போக்குவரத்துபாதையை
உணவுக்குத் தட்டுப்பாடு உயிர்வாழ்ந்தனரே கஷ்டத்தோடு
நொறுங்கிய மண்ணினுள்ளே நொறுங்காத இதயம் கொண்டே
எழுந்தனர் புயல் எதிர்க்கும் மரங்களாய் இளந்தளிர்கள்
ஞானத்தின் திறவுகோலை ஏந்தினரே ஆயுதமாய் - தயாரித்தனர்
இலட்சியவிளக்குகளையே கற்றனரே சிறப்பாக அவ்வொளியில்
இலங்கையிலே பெற்றனரே முதலாவது இடத்தைத் தானே!

கொட்டிலிலே பாடம் நடக்கையிலே புக்காராவால்
கொட்டிடுவான் குண்டுகளை கொலைவெறியுடன் தானே
ஆ.... ஐந்துசாவு பலர் காயம் - எங்கும் இரத்த வெள்ளம்
ம்... தொடர்வோம் பாடம் லயிப்போமே பாடத்தில்
அன்றாட வாழ்வியலாய் இது தொடர பழகிவிட்டோம்
பனம்பழத்தில் சவர்க்காரம் செய்து சைக்கிள்
டைனமோ சுற்றி வானொலி செய்தி கேட்டு ரயர்
துண்டுகளில் தூங்காவிளக்குகள் கண்டு சாதித்தோமே!

தமிழ் பேசும் காரணத்தால் மலையகத் தமிழரை
அடித்தே விரட்டினர் இந்தியா செல்! என்று
வழங்கவே மறுத்தனர் பிரஜா உரிமையைக்கூட
மலையகத் தமிழர் குருதியை உறிஞ்சியே
செழித்து வளர்ந்தது பெருந்தோட்டப்பொருளாதாரம்
குடிக்கவும் கஞ்சியின்றி ஒழுகும் லயனில் சுருண்டு
உடலினை தேயிலைக்கு உரமாக்கியே உழைப்பவர்தம்
உழைப்பினை சுரண்டியே கொழுத்தனர் பேரினவாதிகளே!

சிறுபான்மை இனம் என்று காரணம் கூறி
வைத்தனரே அனைத்திலுமே விகிதாசாரம்
அரசியலில் அங்கம் பெற விகிதாசாரம்
பல்கலைக் கழகம் செல்ல விகிதாசாரம் - ஏன்
பாலர் புலமைப்பரிசில் பரீட்சையில்கூட இதேவிகிதாசாரம்
இருநூற்றெட்டு புள்ளியுடன் குசுமலதா வைத்தியராய்
இருநூற்றைம்பது பெற்றும்கூட வீட்டில்தான் நம்மூர் லதா
திறமைகளால் பெருமையிலா நாட்டைவிட்டேநாடினர் வெளிநாடு!

வடக்கிலே மட்டுமல்ல கிழக்கிலும் அழித்தனர் தமிழரைத் தானே
இதைக் கண்ணாரக் கண்டேனே நெஞ்சம் புண்ணாகி நின்றேனே
கோணமலை மாவட்டத்தில் கிளிவெட்டியூர் என்றதோர் தமிழ்க்
கிராமம்
அங்கு வெறியாட்டம் ஆடினரே எண்பத்து ஐந்தில்தானே

அப்போது என்பராயம் ஐந்தாம் அங்கே கண்டவை என்கண்ணில்
இன்றாம் நன்றே- தந்தையைப் பலிகொண்டனர் அன்றைய
நாளில் தானே அதையான் சாற்றுகையில் கண்ணீர் தானே
சுருக்கியான் கூறுகிறேன் நீர் கேட்பீர்தானே!

அன்றொருநாள் மழலைகள் யாம் கதைபேசி முற்றத்து
நிலாச் சோறூட்டி மகிழ்ந்திருந்த வேளையதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடியோசை தோற்றிட வந்தனவே வெடியோசைகள்!
எங்குமே கூக்குரல்கள் "ஐயோ!அம்மா! சிங்கள
காடையன்கள் வெட்டிவாறான் ஓடு ஓடு!"
ஊர் திரண்டு ஓடிச்சென்றோம் - கையிலே
ஒன்றுமில்லை காலுக்குச் செருப்புமில்லை வீடுகள்
பூட்டவில்லை பணம் நகைகூட எடுக்கவில்லை!

ஆற்றினை நாடிநாம் அக்கரை சென்றிட்டோம் - சற்றே
மறுகரை நோக்கினோம் மின்சாரம் தாக்குண்டோம்!
ஊர் அங்கே காணவில்லை விண்ணைமுட்டும்
தீப்பிழம்பு எம் கண்ணுள் நின்றே சுழன்றதே
"ஐயோ அம்மா" அலறல் ஒலி வாட்கள் கத்திகள்!
மோதும் ஒலி கர்ப்பிணிகள் வெட்டுவிழ உதரம் பிளந்து
குருதிப் புனலாடி துடிதுடித்தே வெளிவந்து
செத்தே வீழும் தமிழனின் கருவறைச் சிசு!

எம்மைக் கரைசேர்த்து காப்பாற்றியே என் தந்தை
தன்னைக் காக்கமுன்னர் தன் ஊர் மக்களை
கரையேற்ற மறுகரை சென்றாரே திருடர்போல் பதுங்கிய அக்
கொடியோர்கள் சுற்றியே வளைத்துப் பிடித்தனர் எம் தந்தையாரை!
கண்களைக் கட்டியும் கைகளைப் பிணைத்தும்- சுட்டேதான்
கொன்றனரே! எரித்தே அழித்தனரே! சுருக்கியே யான்
கூறமுடியா சோகக் கதைகளே இவையப்பா - இதை
பறைசாற்றிடுமே கிழக்கின் இரகசிய புதைகுழிகளப்பா!

அஞ்சா நெஞ்சம் கொண்டே தமிழனை
வீறு கொண்டெழச் செய்தது எம் சோகவரலாறே!
அடக்கியே ஆண்டிட தமிழன் ஒன்றும்
மட்டி மடையன் அல்லவென்று உலகுக்கே,
உணர்ந்திட நாம் தொடங்கினோம் ஓர்போராட்டம்!
தமிழனுக்கு வீரம்உண்டு!என நிரூபித்தே காட்டிவிட்டோம்
உலக அரங்கே மூக்கில் விரல் வைத்து உற்றே நோக்கியது
உங்களுக்கு உரிமை உண்டு என புரிந்தே கொண்டது!

உலகமே வியந்தது மூக்கிலே விரலைத்தான் வைத்தது
உங்களுக்கும் உரிமைஉண்டு புரிந்தே கொண்டது எதிரிகள்
போராடித் தோற்றனர் எம் காலடியில் வீழ்ந்தனரே சர்வதேசமே
தமிழனை அறிந்து கொண்டது நடுநிலையாளராக முன்வந்தது
படைக்கலம் படைக்கும் திறமை! அதிலே அறிவியல் கலந்த
பெருமை படை நடத்தும் புதமை! வியூகம் வகுக்கும் புலமை!
விடுதலையில் பெண்மையின் புதிய சாதனை அப்பப்பா
சொல்லியே மாளா(து) இன்னும் சாதிப்பான் எங்கள் தமிழன்!

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறவுகள் சிதறின!

3ம் பரிசுபெற்ற கவிதை (ரூபா 5,000)
ம.கொன்சலிற்றா (ஆட்காட்டிவெளி, மன்னார்)

அதோ விழுந்து போய்க் கிடக்கிறது
தமிழரின் வாழ்க்கைப் புத்தகம்
கறையான்அரித்தும்
அரிக்கப்படாமலும்!

தமிழரின் வாழ்வும்
இப்படித் தான் என்று உணர்த்தியபடி!
நிரப்பப்படாத பக்கங்களைவிட
நிரம்பிய பக்கங்கள் தான் ஏராளம்!

நிரம்பிய பக்கங்களின்
சுமை தாங்க முடியாமல்
ஓ! என்று அழுகிறது!
அந்தோ பரிதாபம்!

தூசி தட்டிப் போடுவாருமில்லை
ஏனென்று எடுத்துப் பார்ப்பாருமில்லை!
அநாதைக் குழந்தையாய்
ஆதரவற்று தத்தளிக்கின்றது!

ஒவ்வொரு பக்கங்களும்
கறை படிந்த ஓவியங்கள்!
இல்லை இல்லை
கண்ணீர்க் காவியங்கள்!

ஒவ்வொரு வரியும் சொல்லும்
அதன் வேதனையை!
எத்தனை இடப்பெயர்வுகள்?
எத்தனை இழப்புகள்?

வீடிழந்து நாடிழந்து
சொந்தஉறவுகளையும் இழந்து
அந்நிய தேசத்தில்
அகதிகள் என்னும் பட்டத்தோடு

அல்லல்கள் இனி வேண்டாம்!
எதுவும் தேவையில்லை
உயிர் ஒன்றே போதும்! என்று
தஞ்சம் தேடி அலைந்தபோது
உறவுகள் சிதறின!

தாயைப் பிரிந்த மகளும்
தந்தையைப் பிரிந்த மகனும்
இறுதிவரை ஒன்றுசேர முடியாமல்
மரணித்த அவலங்கள் போதும்!

இந்தச் சோதனைகளெல்லாம்
தமிழராய்ப் பிறந்ததால் தானோ?
பறவைகளாய் பிறந்திருந்தால் கூட


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்குமுறையில்லை!

இனப்பிரச்சினை இல்லை!
அண்ட தேசம் முழுவதும்
ஆடிப்பாடி மகிழ்ந்திருக்கலாம்!
விலங்கினமாய்ப் பிறந்திருந்தால் கூட
இன்பமுடன் வாழ்ந்திருக்கலாம்!

தமிழராய்ப் பிறந்தது தான்
செய்த பாவமோ?
எதற்காகப் பிறந்தோம்?
வாழ்ந்தோம் மடிந்தோம் என்று
வரலாறு படைக்கவா?
இல்லை! இல்லை!

சோதனையையும் வேதனையையும்
தாண்டி சாதனை புரிவோம்!
என்று கிளர்ந்தனர்
சில பள்ளிச் சிட்டுக்கள்!
ஐயோ பாவம்!

அடக்குமுறைக்குள் அடங்க முடியாமல்
கருகிப் போயினர் மொட்டுக்கள்.
சாதிக்க என இருந்த
இறுதி ஆயுதம் கல்வி அதிலும்
ஏற்றத் தாழ்வுகள்!
புறக்கணிப்புக்கள்!

அதுவும் போதாதென்று
வறுமையின் கோரப் பிடியில்
சிக்குண்டு எழுந்து நிற்க
முடியாத போது
ஊன்று கோலாகக் கிடைத்தது
நிவாரணம்!

எழுந்து நிற்கும் முன்பே
உடைந்து விட்டது ஊன்றுகோல்!
உடைந்தபின்தான் தெரிந்தது
தரப்பட்டது ஊன்றுகோல் அல்ல
உடைந்தகோல் என்று
அதுகூடக் கானல் நீராகிப் போனது
போதும்! போதும்!
பட்ட துன்பங்கள் போதும்!

இனியும் வேண்டாம்
இந்த அவலம் என்று
மனுக்கள் பல கொடுத்தபோது
அனைத்துமே
செவிடன் காதில் ஊதிய சங்காகிப் போனது!

இவ்வாறு சுழல்காற்றில்
அடிக்கப்பட்ட துரும்பாக
வாழ்க்கைப் புத்தகம் புரட்டப்படுகின்றது
கடைசிப் பக்கமாவது
வேதனையும் சோதனையும் தீர்ந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனையைத் தாங்கி நிற்காதா?
என ஏக்கத்தோடு
சிதறிக்கிடக்கிறது
எதிர்காலக் கனவுகள் எல்லாம்!

வெறும் கனவாகவே இன்றும்
இரவுக்குள் நடமாடியபடி
நகர்கிறது
தமிழரின் வாழ்க்கைப் புத்தகம்!

● ● ●



மார்சே மாருதி
Free Delivery Beer & wine



மரக்கறி வகைகள், மீன், இறைச்சி வகைகள்
பல சரக்குப் பொருட்கள்
துரித பணமாற்று சேவை வீடியோ படப்பிடிப்பு
Fax சேவை

Marche maaruty Enr
155 Jean Talon East
Montreal, Qc

Tel: 514 270 9511
Fax: 514 495 4955




S&S Engravers
SPECIALIZED IN METAL PLASTIC & WOOD ENGRAVING

Bus: 416.335.6819
Cell: 416.875.3500
Fax: 416.609.0272
Email: ssengravers@rogers.com

285 Progress Ave., Unit 8, Scarborough, ON. M1P - 2Z3




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமாதான மலர் விதைத்து பனைமரத் தென்றலில்...!

பாத்திமா ஜசீலா நிலாம், அக்குறணை, கண்டி

4

கவிதை பாட வந்திருக்கிறேன் - நல்லதொரு
கவிதை பாட வந்திருக்கிறேன்
இலங்கை தமிழ்பேசும் மக்களின்
வேதனை! சோதனை! சாதனை! பற்றிய
நல்லதொரு கவிதை பாட வந்திருக்கிறேன்
வேசம் கொண்ட சில ஆத்மாக்களின்
மோசங்களால் தூசிக்கப்பட்ட தமிழ்மக்கள்!
எம் ஜீவிதப் புத்தகத்தை வாழ்க்கையின் பரிணாமங்களில்
சீர்தூக்கி விட்டவர் யாருமேயில்லை!

யுகமொன்று சிருஷ்டிக்க வேண்டும் - என் நெஞ்சிலுள்ள
பாரத்தை இறக்கி வைப்பதற்கு
அதிகாலையின் - அழகுப் பொழுதினில் பென்னம்பெரிய
இலைகளில் ஒய்யாரமாய் படுத்துறங்கும் பனித்துளிகள்
சட்டென்று காணாமல் போனது போன்று
சந்தோஷமாயிருந்த மனங்கள்மீது மெல்லமெல்ல - இன்று
பதற்றம் பரவியது திடீரென்று சமாதானப் பேச்சு
இடைநிறுத்தப்பட்டதால்!

இந்நாளில்
தேய்ந்து போனது என் தேசம்
என் வீட்டு முன்முகப்பு முகம்தொலைந்து போயிருக்கிறது
என் தாய் வீடு பாழ்வீடாக மாறி
பற்றைகள் சூழ்ந்து கிடக்கிறது ஆங்காங்கே
குருவிக் கூடுகள் கட்டப்பட்டிருந்தன!
என் வீட்டு மோட்டுவளை பக்கத்துவீட்டில் கிடக்கிறது!

முன்பெல்லாம் என்னை முத்தமிடும்
முற்றத்தில் படர்ந்த அவரைக்கொடி!
சுவரப் பக்கமாய்
அப்பா தூங்கிய சாக்குக் கட்டில்!
நிலாத் தயிர் குழைந்து தங்கச்சி சாப்பிட்ட
தட்டுப் பீங்கான்!
அம்மா ஆசையாய் உடுத்தும் பூப்போட்ட ஒயில்சாரி!

கொல்லைப் பக்கம் கோலம் குறைந்து கிடக்கும்
அப்பா செலுத்திய கரத்தை வண்டில்! - இன்னும்
தவிட்டு வாளி!
புறாக் கூடு!
புட்டுக் குடில்!
புடவைப் பெட்டி! எல்லாமே கரி பிடித்தும்
கறையான் அரித்தும் சிதைந்து கிடக்கின்றன வீட்டில்
விறாந்தையைத் தவிர மற்றவையெல்லாம் புல்பூண்டுடன்
பூத்தும் இருக்கிறது!


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்போதெல்லாம்
என் தேசத்து மண்ணுக்குள் கனிப்பொருட்களை விட
கண்ணி வெடிகளே ஏராளம்.
இன்னார் வாழ்வு இன்னதென ஏற்கெனவே
அவன் எழுதிவிட்டான்!
விடிந்துவிட்டால் விடிவு கிடைத்துவிடும் என்கிறார்கள்!

எத்தனையோ இரவுகள் விடிந்தும் விட்டன ஆனாலும்
எமக்கு இன்னும் விடிவு ஏனோ கிடைக்கவில்லை
விடியாத முகங்களுடன் விரக்தியின் விளிம்பில்
விடியலை நோக்கி நிதம் எம் விழிகள்
தவம் கிடக்கின்றன!

சுதந்திரம் கிடைத்தது! என்று பெயர் தானுண்டு
எது சுதந்திரம்? வாக்குகளை வேட்டையாடி வாரிச்
சுருட்டும் வரை வாசல்களுக்கு செருப்புகளைப் போல்
நிற்கும் அரசியல்வாதி!
எல்லாம் முடிந்ததும் அரசியல்
வாக்குறுதிகள் புஸ்வாணமாவது தானா?
நீங்கள் கூறும் சுதந்திரம்?
இன்றுவரை தமிழ் மக்களாம் எமக்கு
சுதந்திரம் கிடைத்ததாகத் தெரியவில்லை!

புயல் வந்தாலும் எம்மையே தாக்குகிறது
யுத்தமும் எம்மையே உருக்குலைக்கிறது
சுனாமியும் தன் சூட்சுமத்தை காட்டி
மிச்சம் மீதியிருந்த எம்
உறவுகளை காலை ஆகாரமாய்
கொலை ஆகாரம் செய்து விழுங்கிச்சென்றது!
இதுதான் எம் வாழ்க்கையா?

தேர்தலொன்று வந்தால் அரசியல்வாதிகள்
செருப்புத் தேயத்தேய நம்வீதிக்கு வருவார்கள்
அடுக்கடுக்காய் வாக்குறுதிகள்!
இன மத மொழிவழிகளில் பிரிவதை
இலங்கையில் இனப்பகை இனிக் கிளர்ந்தெழுவதை
தொழில் வளம் குறைவதை
பசிப் பிணி தொடர்வதை
கல்வியில் நடைமுறை களங்கமாய் அமைவதை
பொருட்களின் விலை மலைஉச்சியைத் தொடுவதை
வித்தகத் திறமையால் நிச்சயம் போக்குவேன்!
ஏழைகளின் தோழனாக எப்போதும் வருவேன்
என்றெல்லாம் பல பேர் விரசக் கதை கூறுகிறார்கள் - ஆனால்

அன்று சிறுபான்மையை வஞ்சித்த சிறிமா சாஸ்திரி எனும்
அரக்கனவனுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர் எவரோ?
ஆனால்..
அரசியல்வாதிகளோ உற்றமும் சுற்றமும் உயர்வினில் முட்டவும்
நற்றவை பற்றவும் நலம்பல கிட்டவும்
புதுமனை கட்டவும் புகழினைத் தட்டவும்
நாடுகள் சுற்றவும்

எலக்ஷன் எலக்ஷன் என்று
அப்பாவி மக்களின் வாக்குகளை
செலக்ஷன் செய்துவிட்டு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசியில் நாடாளுமன்றக்கதிரைகளை சும்மாஇருந்து
சூடாக்கும் ஊமை அரசியல்வாதிகளை
மறுபடியும் மாலைபோட்டு அலங்கரிக்கிறது ஒரு கூட்டம்!
ஏமாறும் கூட்டம் இருக்கும் வரை
ஏமாற்றுபவன் இருக்கத்தான் செய்வான்!

அதுபோல்
இன்னொரு தேர்தலிலும் ஏமாறப் போகிறான்
எம் தேசத்து ஏழைக் குடிமகன்!
பசியில் வாடுகிறான் ஏழைச் சிறுவன் அவனுக்கு
சோற்றுப் பருக்கைகளை கொடுக்காமல் - ஏன்
துப்பாக்கி ரவைகளைச் சாப்பிடச்சொல்கிறீர்கள்!
போராட்டம் என்று சொல்லி போர்ப்படையை உருவாக்கி
அதில் மனித உயிர்களை சலவை செய்வது
மட்டும் தான் சரித்திரமாகுமா?

அகதிகளே எங்கள் பெயராகிப் போனது!
பொத்தல் கிடுகுகளே எங்கள் வீட்டின் முகடுகள்!
கிழிந்த கூடாரங்களே எங்கள் இல்லத்தின் சுவர்கள்
சுவர் இல்லாமையால் எங்கள் வாழ்வில் சித்திரங்களுமில்லை
எங்கள் அடுப்புகளில் சொகுசாய் உறங்கும் பூனைக் குட்டி
இன்னும் எங்கள்வீடுகளில் பாதுகாப்புப்பணியில் படைச்சிப்பாய்கள்!

கல்கியின் பொன்னியின் செல்வன் போல் நீளும் எம்
சோகங்கள் - இன்னும் எத்தனை நாள்?
இங்கு தொடர்கதை!
சமாதானத்திற்கான சமிக்ஞைகள் மங்கலாகவே தெரிகின்றன
இடம் பெயர்ந்தவர்கள் என்ற கௌரவப் பெயருடன் - இன்னும்
நாங்கள் அகதி முகாம்களில் வாழ்கின்றோம்!.

தமிழ் மக்கள் நாம் தான் தினம்
வேராய் நின்ற நம்மவர் நாடெனும் விருட்சத்தை
தாங்கி நின்றோம்
உள்நாட்டு மண்வளத்தை உயர்வாகப் பயன்படுத்தி
நல்லேற்றம் பெறச் செய்ததும் நாமே - இருந்தும்
சோறு உண்ணக் கூட சொற்ப நிம்மதி இல்லை - இங்கு
நாறுகிறது எங்கள் கூட்டம் நன்கிதை யார் அறிவார்?

நாம் பயணித்த நீண்டதூரப் பயணங்களில்
நெருஞ்சி முட்களும் பாதங்களைப் பதம் பார்த்தன
போதாதென்று பாரதூரமாய் நெஞ்சையும் காயப்படுத்தின
அந்தநிகழ்வுகள் என்றும் அழியாதகோலங்கள் அல்லவா!

கோடை காலத்தின்
ஆற்றுப் படுக்கைகளில் கொக்குகளுக்கும்
குருவிகளுக்கும் கொண்டாட்டம்
வைத்தது யார்?

நியமம் தொலைந்த எதாவதொரு நிர்ப்பந்தத்தில்
இதயம் கொடியாக ஒட்டிக் கொண்டாலும்
இளகாத ஆமை ஓடுகளாய்
எம் இலட்சியப் பாதை!

சுருதி பிறளாத
ஒரு சங்கீதத்தை எம்மால் இசைக்க முடியாது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜீவிதப் பரிவர்த்தனைகளில் - நாம்
கிணற்றுக்குள்ளிருந்து பேசுகின்றோம்!

கனவு தெறிக்கும் எம் செவியோர் செட்டைகள்
குட்டைப் பாவாடையணிந்து
கூத்தாடித் திரிகின்றனர்
எம்மை ஏமாற்றுபவர்களின் பேச்சில்!

நாம் பௌர்ணமியைக் கண்ணாடியில் பார்த்து
தொட்டுக்கொள்ளும் போதெல்லாம்
எம் மனசுடன் மாத்திரம்
நிலா ஜுஸ் பருகுவதேன்
நாம் அன்று முதல் இன்று வரை
நிறையவே சேமித்து வைத்திருக்கின்றோம்!

ஏக்கங்களை,
ஏமாற்றங்களை,
நம்பிக்கைத் துரோகங்களை!
நயவஞ்சகங்களை இப்படி
வாழ்க்கையின் பரிசுப் படிமங்களாக
சேமித்து வைத்துள்ளோம்!

அராஜகம் வென்றுவிட்டது!
மனிதம் செத்துப் போகவே மனிதன்
நினைக்கின்றான்போலும் கோடிகோடியான வாக்குகளில்
கோடிக்கணக்கான உயிர்களுக்கு உலை!

மனிதா! நீ யார்?
இம்மண்ணில் அண்ணல்கூறும் மதிப்புள்ள ஐந்து நீயா?
சிலர் உடைகளில் சிக்கனவாதிகள் - சிலர்
பணமிருந்தும் பஞ்சப் பரதேசிகள் - சிலர்
நன்றி கெட்ட நயவஞ்சகர்கள் - சிலர்
சிரித்துப் பழகும் எதிரிகள் - சிலரின் பட்டினியில்
சிலர் வயிறு வளர்த்து,சிலரின் வயிற்றெரிச்சலை
சிலர் வேண்டுகின்றனர் - சிலர் நல்லவர்கள்!ஒருசிலர்
நல்லவர்களாக நடிப்பவர்கள்!
எனக்குத் தெரிந்தவரை ஒரு சிலர் தான்
மனிதர்கள்! மற்றவரெல்லாம்
படிவிட்டுப் படி தாண்டும் பச்சோந்திகள்!

எனக்கு நம்பிக்கை இருக்கிறது
எனதான தேசத்திலுள்ள
ஹீரோஷிமாக்களையும் நாகசாக்கிகளையும்
என்றாவது ஒரு நாள் சமாதான மலர் விதைத்து
பனைமரத் தென்றலில் பண்ணிசைக்கலாம் என்று
எனக்கு நம்பிக்கை இருக்கின்றது.

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிரந்தர சமாதானமே வா!

மோகனதாஸ் குமுதரஞ்சனி, மடுல்சீமை, பதுளை

5

இந்து சமுத்திரத்தின் முத்தான
இலங்கையே…! நீ
குடியரசானதால் எமக்கு
என்ன பயன்? ஆயிரம்
அரசியல் கட்சிகளை வளர்த்துவிட்ட
நீ தமிழ் மக்களின் மனக்கட்சியை
திறப்பது எப்போது?

1956ஆம் ஆண்டு சிங்கள மொழியை
அரசகரும மொழியாக்கி
தமிழர்களை ஆட்டிப் படைத்தாய்!
ஆங்கிலம் தெரியாதவரை
உன் அடிமையாக்கினாய்!
1958இல் தமிழ் மொழியை
பிரச்சினையாகக் கருதினாய்!
1970இல் அனைவரும் சந்தோசப்படும்வகையிலா
கல்விக் கண்ணைத் திறந்தாய்?

இனவாதம் என்ற அடிப்படையில்
தமிழ்! சிங்களம்! எனப் பிரித்து
யுத்தம் என்ற பூகம்பத்தை
வெடிக்க வைத்தாய்!
அதில்
தமிழோ சிங்களமோ எனத் தெரியாமல்
உயிர்களை குடிக்கவைத்தாய்
பச்சிளம் குழந்தைகளையும்
பெற்றோரையும் அல்லவா
கொன்று குவித்தாய்!

பங்கிடமுடியாத பகையாளி
பூமியால்! செத்து மடியும்
ஜீவன்களுக்கு மயானமானாய்!
சமாதானம் சகவாழ்வு
புரிந்துணர்வு ஒருமைப்பாடு!
இவையெல்லாம் அரசியல்வாதிகளின்
சாயம் போன வார்த்தைகளா?
இத்தனை வருடங்களாக
யுத்தப் பேரழிவு ஏற்பட்டது
போதவில்லையா?

இனவாதத்தால் தமிழர்களின்
எண்ணங்கள் சர்வநாசமாகுவதா?
மாண்ட வீரர்களின் உயிரைக்
குடித்தது போதவில்லையா?
வீரர்களின் மாதாக்கள் கதறுவது
உனக்கு கேட்கவில்லையா?
தமிழர்களின் இழப்பைத் தாங்க முடியாது
பூமித்தாயே கதறியது உன்
காதுகளில் விழவில்லையா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் தன் ஆவேசத்தைக் காட்டி
சுனாமியாக வந்தது தான் நினைவில்லையா?
அதில் பல்லாயிரம் உயிரைப் பறித்ததுவும்
நினைவில்லையா?

தமிழ் மக்களின் கனவுகளை
நனவாக்குவது எப்போது?
அவர்களின் கண்ணீரைத் துடைத்து
சந்தோஷத்தை ஏற்படுத்துவது
எப்போது?
அவர்கள் அணையாத ஒளிவிளக்காவது
எப்போது?

கவலைகள் மறந்து சுதந்திரப்
பறவையாவது எப்போது?
தாய்ப் பாசத்திற்காக ஏங்கும் குழந்தைகளின்
ஆசைகள் நிறைவேறுவது எப்போது?
தாய் தன் பிள்ளைக்கு
நிலாச் சோறு ஊட்டுவது எப்போது?
மண்மீது மடிந்த வீரர்களின்
ஆத்மா சாந்தியடைவது எப்போது?
அநாதையான குழந்தைகளுக்கு
விடிவு கிடைப்பது எப்போது?

அர்த்தமற்ற யுத்தத்தால்
அனைவரையும் ஊனமாக்குவது சரியோ?
மீண்டும் ஒரு சுனாமி வடிவில்
யுத்தம் ஒன்று தேவைதானா?
தமிழர்களின் வாழ்க்கையை இன்னும்
சீரழிப்பது தான் சரியோ?
தமிழ் மக்களின் உயிருக்கும் உயர்வுக்கும்
யுத்தம் ஒரு தடையாக இருப்பது முறையோ?
இலங்கை மண்ணில் பிறந்த மக்களுக்கு
இதுதான் நீ வழங்கும் தீர்ப்போ?

தமிழர்கள் படைக்கப்போகும் சாதனைக்கு
யுத்தம் ஒரு தடையாக இருப்பது சரியோ?
நீதிக்காகப் போராடும் தமிழர்களுக்கு
நீ வழங்கும் தீர்ப்புத் தான் எதுவோ!
அமைதியாக இருக்கும் தமிழர்களை
ஆட்டிப்படைப்பது சரியோ?
அவர்களின் உயிரைக் குடித்து
ஊஞ்சலாடுவது என்ன நியாயம்?

மனிதாபிமானம் இல்லாமல் மக்களை
சீரழிப்பதால் உனக்கு என்ன இலாபம்?
விதி தலைவிரித்தாடியது போதும்!
வேண்டாம் இனி யுத்தம்!

குண்டுகளின் சத்தம் கேட்டு மடிந்தது
போதும் மக்கள்!
வேதனைகளைத் தாங்கிய மானிடர்களுக்கு
வேண்டாம் இனியும் ஒரு சோதனை!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுனாமிக்குப் பின்னர் ஏற்பட்ட
சமாதானமே! நீ நீடித்து
இலங்கை மக்களை வாழவை
மரத்திற்கு ஆணிவேர் போல்
தமிழ் மக்களுக்கு நிரந்தர
சமாதானமாக உருவெடுத்து நில்!
அவர்களின் எண்ண அபிலாஷைகளை
நிறைவேற்றி வை!
இலட்சியத்திற்காக போராடியவர்களுக்கு
நல்ல வழியைக் காட்டு சமாதானமே!

நிரந்தர சமாதானத்திற்காக
தவித்துக் கொண்டிருக்கும் நெஞ்சங்களை
தளரவிடாதே!
அரசியல் தலைவர்களுக்காக இல்லை
என்றாலும்,
அடிபட்டுக் காயப்பட்ட நெஞ்சங்களுக்காக
மனமிரங்கி வா சமாதானமே!
சிறைக்குள் அடைப்பட்ட சிட்டுக் குருவிகளை
வெளியிலிட்டு
அவர்களைச் சதந்திரப் பறவையாக்கி
அவர்களின் மனதை சந்தோஷப்படுத்து சமாதானமே!

• • •




BRILLIANT TUTOR
@ Your Home

Home Service Tutoring
Office: 416 291 4684
905 507 8470
Cell: 647 297 5842

KUNA SHAN (B.ENG)
21 Century Drive, Scarborough, Ont M1K 4J5
E.mail: brilliant-tutor@yahoo.com


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## உறவுகள் எங்கே?

தருமரத்தினம் மதியழகன், இறம்பைக்குளம், வவுனியா

6

நான் என்ன அவதார மனிதனா?
பூமி பிழந்து
புறப்பட்டு வந்தவனா?
ஏனிந்தக் கொடுமை
எனக்கு...
ஏனிந்தக் கொடுமை?

சாக்கடைச் சருகாய்
சிறகு இழந்த சிட்டாய்
இணை இழந்த செருப்பாய்
துடுப்பு இழந்த படகாய்
தேடுவார் இன்றி
தனிமையில் நான்!

அனாதையாம் - நான்
அனாதையாம்
தினம் தினம் - என்
செவிப்பறை கிழியும்
செல்லடி வார்த்தைகள்!
ஏற்க முடியவில்லை
வாழ்க்கை பிடிக்கவில்லை!

மரணவாடைக்குள் - என்
வாழ்நாள்
ஏனிந்தக் கொடுமை
எனக்கு
ஏனிந்தக் கொடுமை?

கனவு சுமந்து
கருவில் சுமந்து
உருவம் தந்த
உயிர்த் தாய் எங்கே?

அன்பு தந்து
அறிவு தந்து
அரவணைக்கும்
அப்பா எங்கே?

ஆடிப்பாடி
அன்பு சொரியும்
அண்ணன் தங்கை
அக்கா எங்கே?
உற்ற உறவுகள் தான்
எங்கே?

சிறைகளிலா?
சித்திரவதை முகாம்களிலா?
இடம்பெயர்ந்தனரா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர்ந்தனரா?
யுத்தம் தான் தின்றதா?
செம்மணிப் புதைகுழியில்
செம்மையற்றுப் புதைத்தனரா?
கிருஷாந்தி வழியில்
என்னுறவும் தொலைந்தனவா?
எங்கே...? எங்கே...?
என் கேள்விக்குப் பதில்தான்
எங்கே...?

• • •

**The Sankanai**

*Furniture Inc*

**(For Furniture & Mattresses)**



**Tel: 416 264 9642 Fax: 416 264 9644**

2563 Eglington Ave. East, Scarborough, Ont M1K 2S3



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தையிலேயே அகதியானேன்!

மயூதினி வெற்றிவேலு, தெகிவளை, கொழும்பு

7

ஏட்டிலே படித்தேன் நாற்பத்தியெட்டிலே
எம் நாட்டிற்கு சுதந்திரம் கிடைத்ததென்று
என் கண்கள் பனித்தன கண்ணீரினால்
ஏன் என் மக்கள் மட்டும் இன்னும் அடிமைகளாக...?

எதுவும் புரியாத மழலையாய் - அந்த
எட்டி நடக்கும் குழந்தைப் பருத்திலேயே
எல்லா ஊர்களையும் எட்டிப் பார்த்தேன்
என் பெற்றோருடன் அகதிகளாக...!

என்றும் இனிக்குமாமே அந்த இளமைப் பருவம்
எனக்கு மட்டும் ஏனோ கசக்கிறதே!
ஏனெனில் இங்கு சுகமான நினைவுகளல்ல
எங்கு பார்ப்பினும் சுமையான வலிகளாக!

ஏரோப்பிளேனை பார்த்து ரசிக்க வேண்டிய வயதில்
ஏழுகாணி தாண்டி ஓடினோம் பதுங்குகுழி தேடி!
எத்தனை யுகங்கள் கடந்தாலும் யாரறிவார்
எம்மண்ணில் நாம் பெற்ற வேதனை வஞ்சகமாக...

ஏர் பூட்டி உழுத எம் பசுமை வயலிலே
எறிகணைகள் வீழ்ந்து ஏளனம் செய்தன!
எனை வளர்த்த என் இனிய தேசம்
என் கண்முன்னே கதறியதே வறுமையாக!

எழுதவேண்டிய பாடப் பரீட்சைகளை விட
எம் மக்கள் வாழ்க்கைப் பரீட்சையே
என் வாழ்வின் இலட்சியமாகத் தோன்ற
என்னாலும்முடியுமென எண்ணினேன் அஹிம்சையாக

எம் தேசத்தில் ஏனோ தென்றல் புயலானது
எரிகின்ற தீயுடன் நில அதிர்வுகளும் வாட்ட
எல்லையைத் தாண்டி கடலும் சுனாமியானது
எம் பூமித்தாய்க்கும் ஏனோ பொறுமை குறைவாக

எம்மவர் வேதனையே சோதனைகளாக
எம் இள இதயங்கள் வலிக்கிறதே
எமைவிட்டு நீங்கிய எம்மினிய உறவுகளை
எப்போது காண்போம் மீண்டும் மகிழ்வாக

என்னவர் செய்த தவறுதான் என்னவோ?
எம்மிடையே ஏனிந்த ஏற்றத்தாழ்வு
ஏனெனில் யாம் தமிழ்மொழி பேசுவதாலோ?
எம்மொழி அமுதினும் இனிதல்லோ எளிமையாக

ஏடுதூக்க வேண்டிய பிஞ்சுக் கரங்களெல்லாம்
ஏக்கத்துடன் போராட ஆயுதம் ஏந்தினரே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லோருக்கும் இது ஏளனமானாலும்
எமக்குள்ளே வலிக்கிறதே ரணவலி கொடுமையாக!
எம்மவர் புரிந்துள்ள பல சாதனைகளை
எல்லா உலகமுமே இன்று பார்த்து வியக்கிறது
எமக்கு மட்டும் தானே தெரிகிறது
எல்லாமே எம்மவரின் வேதனையின் வெளிப்பாடுகளாக

எத்திக்குச் சென்றாலும் தமிழ்பேசும் மக்களே
ஏனெனில் எமக்கு இருக்க ஓரிடமில்லையே
எப்படியோ இன்று எம்மவரில்லா இடமில்லையே
ஏனோ இதுவும் ஓர் வகையில் சாதனையே!

என்வீடு என் சொந்தம் என் ஊர் என் நாடு!
எல்லாமே கனவுகளாய் தூரத்தில் மின்ன
எட்டிப் போயினர் பலர் எல்லை தாண்டியே
எண்சாண்உடல் காக்கவல்ல, எம் துயர்துடைக்க..!

ஏழ்மை கொடிது அதனிலும் கொடிது அடிமை!
ஏற்பட்டது யுத்த நிறுத்தமேயன்றி சமாதானமல்லவே
எம் துன்பம் எம்சந்ததியாரும் பெறாமலிருக்க
எல்லோரும் சேர்ந்து குரல்கொடுப்போம் உரிமைக்காக

எனை வளர்த்த என் இனிய தேசமே
எல்லையில்லா சுதந்திரக் காற்றை
என்று நீ மகிழ்வுடன் சுவாசிப்பாயென
எதிர்பார்த்தே காத்திருக்கின்றேன் புதுயுகத்திற்காக..!

• • •


**Ravi Paramu**

Sales Rep.

HomeLife GTA
Realty Inc., Real Estate Broker

**Direct: 416 262 4176**
Bus: 416 321 6969 (24hrs Pager)
Emai: rparamu@hotmail.com



**1711 McCowan Rd, Suite # 206, Scarborough, ON. M1S 3Y3**

Independenly Ownd Operated, Broker




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வருவாயில் மலையகமே முதுகெலும்பாம்!

மாரிமுத்து சிவகுமார், சைட் வீதி, ஹட்டன்

8

உன்னதங்கள் பலகோர்த்த
உலகமொழி தமிழ்மொழியாம்
ஏற்றங்கள் குவித்தெடுத்த
எழில்மொழியும் தமிழ்மொழியே!

நாகரீகம் தமிழுக்குண்டு
நவீனமும் இத்தாய்க்குண்டு
அடுக்கடுக்காய் மொழிவரினும்
அழியாமொழி தமிழ்மொழியன்றோ!

தகைமைமிகு தமிழ்மொழியை
தகர்த்தெறிய முயற்சிபல
தரணியிலே தமிழ்க் குருதியினை
தோற்கடிக்க பலபேர்கள்!

தமிழ்வாழும் தரையிடையே
திட்டமிட்ட குடியேற்றம்
குட்டிவைக்க தமிழினத்தை
கொடூரகத் திட்டமொன்று!

பெரும்பான்மை பலமொன்றை
பெற்றிடுவோம் எனப்பயந்து
சிறுபான்மை எமையாக்க
சிங்களம்மட்டும் வந்ததுவே!

தமிழ்வாழும் சந்துகளிலும்
தமிழ்மொழிக்கு குழிதோண்ட
கனிமொழி பேசிக் கால்பதித்த
கயமைநெஞ்சம் காலத்தை வென்றதா?

சிங்களம் மட்டும்! கோஷமொடு
சீர்கெட்ட பாஷையென்றே
சீரான தமிழ்மொழிக்கு
சிங்களத்தின் முதல் வேட்டோ!

வருவாயில் முதுகெலும்பாய்
வாழ்வதில் வறுமையாய்
மலையகத்துள் எளிமையாய்
மண்டியிடும் முதுகெலும்புகள்!

தோட்டத்து பிரஜைகளின்
வாக்களிக்கும் உரிமைகளை
நாற்பத்தியெட்டில் நாசூக்காய்
நாடுகடத்திய திட்டமொன்று!

நாட்டிற்குள் பலமதங்கள்
நாட்டின் முதல்வன் பௌத்தனே
எனக்கூறும் கொல்வினின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் சட்டமும்!

வாழ்விற்குள் இடைபுகுந்து
வாழ்நாளைக் கிளறிப் பார்த்த
பயங்கரவாதத் தடைச் சட்டத்தால்
பயங்கண்ட காலமுமிங்கு!

வன்முறைகளை கட்டவிழ்த்து
வெளிச்செல்லல் தடைப்படுத்தி
உள்ளத்துள் இறுக்கங்களால்
உணர்வுகளின் களைவெட்டல்கள்!

ஈழத்து அறிவுதனை
இயக்கிவந்த நூல்நிலையமதை
தீயிட்டு எரித்தகாலம்
தீமைதனை எண்ணவில்லை!

தொன்மையும் சிறந்ததும்
தொன்னூற்றியைந்தாயிரம் நூல்களை
கொழுத்திவிட்ட கொடூரமும்
கொலைக்குச் சமமுமன்றோ!

சுதந்திரமாய் சூழ்கொண்ட
ஈழநாடு பத்திரிகையும்
இக்காலச் சமநாளில்
இடித்தெறியக் கண்டோமே

தமிழினத்தின் தவறுகளும்
தரணியிலே எதுவென்பேன்?
இத்தகைய சோதனைகள்
எமக்கெல்லாம் ஏனென்பேன்?

காடையர்களின் கைவரிசை
கட்டவிழ்த்து விட்டதெல்லாம்
கறுப்பு ஜுலை என்றவொன்றை
தமிழருக்குத் தந்ததுவே!

சிறைச்சாலைக் கைதிகளை
சிதைவடையச் செய்ததெல்லாம்
சிறீலங்கா நமக்குத் தந்த
நயவஞ்சகச் செயலன்றோ?

குட்டிமணிக்கு கொடுத்ததெல்லாம்
கொலையைவிட கொடுமையன்றோ
எத்திக்கும் கொதித்தெழும்ப
ஏனிந்தப் படுகொலைகள்!

துன்பத்துள் துவண்டெழுந்து
தூரத்தே புலம்பெயர்ந்து
புதுவித யுகம்படைக்கும்
தமிழ்பேசும் மனுஷர்கள்

கிரிக்கெட்டை கிள்ளிப் பார்த்தால்
குறும்புக்கார முரளிதரன்
இரும்புபோல பலமிகுந்த


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இளைஞரவர் இலங்கையிலே

வீரமிகு நெஞ்சமுள்ள
வீரத்தமிழ் தலைவனுமே
ஈழத்தமிழ் மொழிபேசும்
ஈடில்லா மனிதரன்றோ?

புரட்டிவைத்த வதைப்புகளால்
புலிகளிங்கே புலர்ந்தனவே
புதைந்திருந்த தமிழுக்கொரு
விடுதலையும் பெருகுதிங்கே!

• • •


# SHANKAR & CO

Importers & Wholesalers
Brass, Silver Items, Religious Pictures,
Pooga Items, Pooja Flowers And All Types of Pooja Leaves

**Sritharan**







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேதனை கண்ட சோதனைத் தமிழன்

பா.இந்திர சர்மா, நீர்கொழும்பு

9

தூக்கம் கலைந்தது அது
இருள்சூழ்ந்த தூக்கத்தில் இருந்தது
நீரில்லை நிலமில்லை உண்ண உணவில்லை
போரில்லை ஆனால் வெடிச்சத்தம் கேட்டன.

தெருவெளியில் வந்து பார்த்த அன்றுதான் தெரியும்!
அதற்குதான் அதுவரை கருவில் இருந்தேன் என்று
கருவும் ஒன்றுதான் தெருவும் ஒன்றுதான்
கரு தாய் வயிறு தெரு பூமியின் வயிறு
வயிற்றுப் பிழைப்புத் தானே தமிழர் வாழ்க்கை!

தோசை சுடுவதற்குக் கூட ஆசையாய் நாள் பார்க்கும் தமிழனுக்கு
அவன் தேகத்தைச் சுடுவதற்கு சந்தோஷநாள் பார்க்கும் பலருண்டு
பாசத்தைக் காட்டினான் நேசத்தைக் காட்டினான் தமிழன்
வாசத்தைக் காட்டினான் அந்நியன் நாசத்தைக் காட்டினான்
தன் இனப் பாலூட்டித் தாலாட்டிய தாய் இன்று அவனுக்கு
பிணப்பாலூட்டி ஓராட்டுகின்றாள்.

காலாட்டி வாலாட்டிய அந்நியர்களை
நீராட்டி ஆராத்தி காட்டும் நிர்ப்பந்தத் தமிழனாய்
விடிவுக்காய் நல்வாழ்வுக்காய்
காய் காய் எனக் காய்ந்து கொண்ட தமிழன்
பாயிலே கூடப் படுக்கமுடியாத காலத்தில்
ஒரு விடிவுக்காய் விழித்திருந்தான்.

வழியிலே இனமத விழிபட்டால்
ஒழிவதென்ற மன உறுதித் தெளிவும்
கழிவறையின்றிக் கழித்த சிறவனின்
கழிவுகள் காட்டுவழி நின்று மிதக்க
துளிமழையால் அது தமிழன் குடிபுகுந்து
பலிவாங்கி நோய்களாய் பலிக்க
விழிபிதுங்கி ஓவென முழிக்கும் தமிழன்
வைத்தியரை தேடிநாட அவரோ வாடிய சிறைநாட்டில்
சிலர் நாடி ஓடிய வெளிநாட்டில்!

தமிழா இன்னும் நீ விழித்திருக்க வேண்டிய இருள்
காலத்திலே தான் இருக்கின்றாய்!
பற்றோடு உறவுகொண்டாடி
மற்றோரோடு மகிழ்ந்து குலாவி
கற்றாரோடு பெருமை சேர்த்து
உற்றாரோடு உண்டு உறங்கி
நற்றாரோடு நலம் பலபேசி அந்நிய
நாற்றனோடு இருந்த ஆயுதத்தால் உயிர்துறந்த தமிழனே
காற்றோடு கல்லறைக்குள் இருந்து இன்னும் தூக்கமா?

காசினால் கடும் கவலை வேண்டி
ஊசியினால் உயர்நோய் வேண்டி - சூழல்
மாசினால் உடல் மனம் நொந்து தமிழ்
பேசினால் மூச்சுக் காற்று நின்றுவிடும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போச்சுப் போச்சுப் புகழ் போச்சு
ஆச்சி சொன்ன அருங்கதைகள் போச்சு
தாச்சியினால் சுட்ட பலகாரம் போச்சு
மூச்சுப் போச்சு முடிந்து போச்சு - இனி
தமிழன் வாழ்வு தொடர்ந்து போச்சு!

விழுந்த தமிழன் எழுந்தான்
இடிந்து நொடிந்த தமிழன்
இடித்து நொருக்கினான் எதிரி இதயத்தை
வேதனை கண்ட சோதனைத் தமிழன்
சாதனைக்கு முகம் காட்டுகிறான்
கருவயிற்றைக் கழுவி கருக்கலைத்த தமிழன் போய்
தெருவயிற்றைக் கழுவி தெருவிளக்கேற்ற வந்துவிட்டான்

மனதால் மரணித்த மனிதர்கள்
மனிதராய் மரணிக்கப் பிறந்துவிட்டனர்
மானத்தால் மறைந்திருந்த மானோர்கள்
மாட்சிமையால் முடிசூட வந்தார்கள்
மங்களமாய் மக்கள் மகிழ்ந்து மணம் செய்ய
மனமொத்து மனம்களிக்கும் மன்மத மக்கள்
மனைவி பெய் எனச் சொன்னால் பெய்யும்
மழைக்காலம் வந்துகொண்டிருக்கிறது

சுனாமி வந்து துயர் தந்து வறுமை வந்து - இப்படி
துன்பம் வந்து வந்தே தமிழன் தமிழனாய்
நொந்த தமிழனாய் வந்தவன்
மாண்டவர்கள் மீண்டும் மீண்டும் வரவேண்டும் எனத் தமிழன்
ஆண்டவனை நீண்டநாள் கேட்டுக்கொண்டே
துன்ப மனம் தோண்டி நற்காலம் தாண்டி மாண்டு போகிறான்
கடலை விற்ற கடற்கரைவாசிகள்
சுனாமியால் மிதந்து
சுடலையில் குவிக்கப்பட்டனர்.

படலையில் பரிதவித்து நின்ற காதலர்கள்
சுனாமிப் பதருக்குள் காதலாய்ச் சேர்ந்தனர்
விடலைப் பருவத்து வீரர்கள்
மடலை ஏற மறுத்துத் தன் உடலை
சுனாமிக்கே அர்ப்பணித்த கொடுமை

காயத்தை அழித்தா
ஆகாயத்தை அடையவேண்டும்?
பாவத்தைச் செய்தவன்
அகம்பாவத்தில் அலைகிறான்

அவமானத்தில் பிறந்தவன் இன்று
மானத்தில் இறக்கிறான்
கானகத்தில் பிறந்தவன்
விமானத்தில் பறக்கிறான்
விடிவு வரும் இருள் முடிவுகாணும்
ஒடிவு கண்ட எதிர் நொடிவு இதயம்
இடிவு பெற்று தமிழ் வடிவு பெறும்
மடிவு இலா மனிதன் மனிதனுக்கு
பணிவுபெற்று வாழும் வாழ்க்கை இது?

பூமாதேவியே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் இனத்திற்காய் நீ கண்ணீர் துடைத்து
பன்னீர் தெளித்து நன்னீர் நல்குவாய்!
வாய்கொண்ட மழலைக்கு
நற்பாலூட்டுவாய்! சீராட்டுவாய்!
தமிழர்கள் இனி நல்ல தமிழராகட்டும்
மகிழ்வு வற்றாது இன்பம் முற்றாது
அன்பு பற்றாக உறவு நன்றாக
வாழ்வதற்கு வளர்வதற்கு வாழ்வு கொடு அம்மா!

● ● ●









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன மத பேதமில்லா ஈழம் வேண்டும்

செந்தமிழ்ச் செல்வி (அ.உலகவதி), கொழும்பு 13

10

பரந்து விரிந்திருந்த பாரிய நிலப்பரப்பும்
பாரினிலே குமரிக் கண்டமென்று விரிந்து
கோடானுகோடி ஆண்டு கூடுதற்கு முன்னே இக்
குவலயம் எங்கும் தமிழ்க் கோமான்கள் கோலோச்சினரே!

கடுகி வந்த கடற்கோள்கள் இக்குமரியினைக் கொள்ளையிட
கடற்பரப்பிலே ஈழம் கரையொதுங்கிக் காட்சிதர
ஆரியரும் திராவிடரும் ஆர்ப்பரித்து இடமும் கொண்டார்
ஆரிவர்கள்? என்றறியும் ஆர்வம் அன்று இருந்ததில்லை.

பண்டுதொட்டு வாழும் பாரம்பரிய பரப்பும் பண்பாடுகளும்
தொண்டுதொட்டுப் பேசும் தொன்மொழியும்
வம்சங்கள் வளர்ந்து வடகிழக்கில் வாழ்விடமாய்
வரலாற்றுச் சான்றுகளின் வரைபடங்கள் இவை இயம்பும்

ஆரிய அடிப்பிறப்பும் செந்தமிழின் திராவிடரும்
வந்தேறு குடிகளென வரலாறு விரித்திருக்க
செந்தமிழர் சிரங்களிலே செம்மிளகாய் தனை அரைக்கும்
சிங்களத் தலைமைகளால் சீர்குலையும் எம்தேசம்

சிந்திக்கத் தெரியாத சிலந்திவலைப் பின்னலிலே
சீண்டிவிளையாடச் சிறுபான்மை ஆகிவிட்டோம்
செம்பவளத் திருநாட்டில் செந்தமிழர் பெருந்துயரம்
செகம் முழுதும் பரவிச் சிறுமைகள் சேர்க்கிறதே!

மனிதனுக்கு மனிதன் இட்ட மகாபெரிய ஈனங்கள்
மறக்கத்தான் மாட்டார்கள் மறத்தமிழர் மனங்களினால்
ஐம்பத்து எட்டினிலே எழுபத்து ஏழினிலே
எண்பத்து மூன்றினிலே இருந்துதான் தொடர்கிறதே!

சொந்தங்கள் தாம் தொலைய சொத்துக்கள் சூறையாக
மாங்கனியின் மனிதப் பிறவிகளை மண்நெய்யில் எரியூட்ட
பாதுகாக்க வேலியில்லாப் பரதேசிக் கூட்டம் போல்
பாருலகம்எல்லாம் பறந்து பாதுகாப்பு வேண்டிநின்றோம்!

அகதி ஆள் அடையாளம், அடிவருடிப் பிழைப்பு
அமைதி இல்லா எம்மவர்க்கு அளிக்கப்பட்ட வெகுமதிகள்
சொல்லித்தான் மாளவில்லை துன்பங்கள் சோகங்கள்
சொந்த நன்னாட்டினிலே தூண்டில் மீன் ஆனதாலே!

தேசியகாங்கிரசைப் பிரித்து, சிங்களமகாசபை அமைத்தும்
மலையக மைந்தர்களின் குடியுரிமையை மிதித்தும்
சிங்களம் மட்டும் சட்டம் சீறிடத் திணித்ததுடன்
தரப்படுத்தித் தமிழர் கல்வியையும் கலைத்தார்!

தங்கத் தமிழர்களின் தாயகத்து எல்லைகளை
சிங்களத் தலைமைகள் திட்டம் தீட்டியே திரித்து
தம் இனத்தை வரிந்து குடியிருத்தி வாழ வழிவகுத்தும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம் இனத்தைப் புறம்போக்கி இழிவுசெய்தார் இந்நாட்டில்!

சுதந்திரமும் சமத்துவமும் சகோதரத்துவமும் வெல்ல
சுதந்திர புருஷர்கள் சூறாவளியாய் சுழன்று
பாரிசுப் பட்டணத்தில் பஸ்ரீல் சிறை உடைத்து
பிரான்சுப் புரட்சியினால் ஜனநாயகம் வென்றெடுத்தார்.

தியாகமது சிந்தையிலே, வேட்கையது விடுதலைக்காய்
மக்களது மனதுடனே மா பெரிய போராட்டம்
கட்டப்பொம்மனை நிகர்த்த வல்வைத்தலைமையின் கீழ்
கூலிப்பட்டாளமெல்லாம் ஆனையிறவில் பொரியாச்சே!

அகிலத்தின் அளப்பெரிய அயல்நாட்டுப் படையணியை
திகில் அடையப் பலம் திரட்டித் திருப்பிவிட்ட தீரர்கள்
சத்திய சோதனைகள் தாண்டிவரும் தமிழருக்கு
நித்தமும் போராட்டமென்றால் நித்திலமும் நீறாமோ?

ஓயாத அலை!யென்றும் ஒவ்வாத வேள்வி!என்றும்
போராட்ட வடிவங்கள் புயலாக உருவெடுக்க
அலமலந்த அரியணையார் ஆசுவாசங்கொண்டு
அகிலத்து நாடுகளில் "அமைதிப்பேச்சு" அறிவித்தார்!

புத்தரின் போதனையைப் புறங்கடையிற் புதைத்து
புரியாத புதல்வருக்குப் புதிர்போட்டு நஞ்சூட்டி
செப்படி வித்தை காட்டித் தேர்தலில் வாகைசூடி
வித்தகம் விதிக்குமிந்த வேடிக்கைத் தலைமைகள்!

கூரைமீதேறி நின்றும் கோழிபிடிக்க விழிப்பார்
கொடுங்கோல் ஆட்சி செய்யக் கூவி அழைப்பார்
தமிழ் இனத்தை அழிக்கத் தக்கத் திமி தாளமிட்டே
எம் தேச வளர்ச்சியினை தமிக்கிடதோம் ஆக்கினரே!

ஒப்பிலா வளம் கொண்ட உலக அயல் நாடுகளில்
செப்பிடமுடியாது சிறுபான்மைச்சுதந்திரங்கள் சிறகடிக்கும்
மட்டிட முடியாது அவர்தம் மனிதநேயப் பண்புகள் தான்
நாட்டில் கற்றிட வேண்டும்! காவலர்கள் நற்பாடங்கள்!

எல்லோரும் இலங்கையர்கள் என்றிந்த நிலைவேண்டும்!
இனமத பேதமில்லா ஈழமணி நாடுவேண்டும்!
இந்து சமுத்திரத்தில் இலங்குமெங்கள் தாயகத்தில்
இந்த ஒலி எம்காதில் இனிக்கத்தான் போவதெப்போ!

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்போது மனசு புதையக் கதைக்கலாம்?

ஏ.நஸ்புல்லாஹ், கிண்ணியா

11

தாய் மண்ணின்
மடியில் சம்மணங்கொட்டி
பௌர்ணமி நிலவொன்றில்
இனி எப்போது
நீ நான் உட்பட எல்லோரும்,
மனசு புதையக் கதைக்கலாம்?

எல்லோருக்கும் பொதுவானவனே
உன்னிடம் கூட
ஞாபகம் செருகியிருக்கின்றேன்,
என் தாய் மண்
மீதான
ஏங்கியலறல்களை!

ஒரு எரி நட்சத்திரத்தின்
அமானுஷ்யத் தேடலுடன்
தனிமை முறித்துக் கிடக்கின்றோம்
சிவப்புப் பக்கங்கள்
ஆன்மாவுள் பிறவியாய்!

விழுந்து
கையூண்டி
எமக்கான
ஒற்றைப் பாதையில்
நடக்கையில்
நிர்மூலமாக்கப்படுகின்றன,
நிலம் பற்றிய நகர்வுகள்!

ஏதோ
ஒரு எதிர்பார்ப்பில்
நடந்துகொண்டிருக்கின்றோம்
இன்னுமொரு முறை
எமது மண்ணில்
இருத்தலுக்கான வாய்ப்புண்டு
என்கின்ற
அழியாத எமதூரின்
கண்ணுக்கெட்டிய நினைவுகளுடன்!

எனதின் தேசத்தின்
ஆயிரம் அவர்கள்
தொலைத்த
அரைகுறை நினைவுகள்
சாய்வு நாற்காலியில்!

மயானக் காற்றின்
வாழ்வளித்தலில்
ஓரளவு மறந்துவிட்டோம்!
யுத்தத்தின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரண டயறியை
புறாக்கூட்டுக்குள்
பாம்பு புகுந்ததாய்
எமதின் உயிர் துடித்த
சிவப்புப் பக்கங்களை!
பழசு பட்ட
பசுமைகள்
என்னத்துக்கு?
என்கின்ற புலன்களின்
நாக்கு வலித்தலில்
மனசு
இருட்டிற் சமைந்து!
எல்லாம் நிகழ்ந்திருந்த போது
உங்களுக்காய்
அழுதவர்கள்
இரு தசாப்த மீளெழுதலில்
நீங்கள் கவனிப்பாரற்று
தனதின் ஆசைகளை
ரசித்தபடி!
அன்று
துயரத்தின் யாவற்றிலும்
தாயகத்தின் எழு குரல்!
இதோ இன்று
மகிழ்தலின் எல்லாவற்றிலும்
சுனாமியின் வருதலை
போற்றிப் புகழ்ந்து!

எனினும்
எனதூரின்
சில தோழமைகளால்
போராட்டம் பற்றிய
ஞாபகங்கள் சுவாசிக்கப்படுகின்றன...

● ● ●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொடுங்கோன்மையால் வன்முறை பிறந்தது!

நாராயணபிள்ளை வேலுப்பிள்ளை, மவுண்ட்லவினியா, கொழும்பு

12

பிரித்தாலும் பிரிட்டிஷார்
பிரித்துத் தந்து செல்வரா?
பிரிந்துபோகும் பகைமையை
தொடக்கி வைத்துச் சென்றனர்!
மக்களாட்சி தந்தோமென்று
நப்பாசை காட்டியே
தம் சொந்தநலன் கருத்திற்கொண்டு
நஞ்சை விட்டுச் சென்றனர்!

கைகட்டிக் கால் பிடித்து
சலாக்கியங்கள் பெற்றவர்
மக்களாட்சி மரபுகளை
கனவிற் கண்டுமிருப்பரோ?
பெரும்பான்மை சிங்களம்,
சிறுபான்மை தமிழினம்!
சிங்களம் ஆள்பவர்,
தமிழர்கள் அடிமைகள்!

தொடங்கிற்று கொடுங்கோன்மை,
நடந்தது அராஜகம்!
சினந்தது தமிழினம்,
மலிந்தது வன்முறை!
வேட்டுக்கள் தீர்ந்தன,
குண்டுகள் வெடித்தன!
அகதிகள் முகாம்களை
அனாதைகள் நிரப்பினர்!

தமிழன்னை ஆற்றாது பதைத்தனள்!
போலித் தமிழ்த் தலைமைகள்
மதிற்பூனைகளாயினர்!
அரசு அமைச்சுக்கள்அளித்து
சமாளித்து விட்டது!
செந்தமிழைச் சீரழிக்க தனிச் சிங்களம்!
தமிழர்அறிவைச் சிதைக்கத் தரப்படுத்தல்!
மேடைகளிற் தார்மீகம்,
வீதிகளில் வல்லுறவு, வன்செயல்கள்!
மகிழ்ந்தனர் பேரினவாதிகள்!

சாந்தத்தின் உறைவிடம்
தந்தை செல்வா மெல்ல முனகினார்
"இறைவனே தமிழரைக் காப்பாற்று"
மெல்ல மலர்ந்தது விடுதலைவேட்கை!
சந்தர்ப்பவாதிகள் தலைமறைவாகினர்
"அடைக்கலம் அடைக்கலம்" என்றரற்றி
ஆற்றாத வானவர் துயர்துடைக்க
முக்கணன் முருகனைப் பயந்தனன்!

வீடிழந்து, உறவிழந்து, பாடழிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீரழிந்த தமிழர் துயர்போக்க
இறைவன் ஈந்தனன் எம் ஒப்பற்றதலைவனை!
தமிழினத்தின் தனிப்பெருந்
தானைத் தளபதியை!
"அஞ்சற்க" அண்ணல் அபயங் கொடுத்தனன்
உலக சுகங்களைத் துறந்த தியாகத்திருமணிகள்
தானைத் தலைவனைப் புடைசூழ்ந்தனர்!

ஆற்றல் மிக்க திறல்மிகு தம்பிமார்
தலைவனின் ஏவல் கேட்டுக்
கைகட்டி நின்றனர்!
வீரமண்ணின் மைந்தன், தியாகத்தின் சுடரொளி
எம் தானைத் தலைவனின் தந்திர வியூகம்
முருகனின் வேற்படை ஆற்றலை நிகர்க்கும்
எம் தங்கத் தளபதி வகுத்த
தந்திரவியூகத்தில் மகிழ்ந்தனர்!

மறவர் தம் படைப்பலமும்
திறல்மிகு மகளிரின் படையணியும்
அனல் உமிழும் ஏதிலார்
சுடுகணைகளைத்துச்சமென நகையாடி
தகர்த்த கோட்டைகள், முடக்கிய முகாம்கள்
எத்தனை! எத்தனை!!
வீட்டைத் துறந்து, உறவுகளை மறந்து,
எதிர்கால வளங்களை உதறி,

தாயகமீட்பை உயிரென மதித்து,
துப்பாக்கியேந்தி, கொடுங்களமிறங்கி
தாயகப் பற்று வீர உணர்விற்கு உரமூட்ட,
கூலிப் படைகளைச் சிதறடித்த
எம் தியாகத் திருமணிகளின்
வித்துடல் சுமந்து அவர்கள்
சொரிந்த குருதி வளமூட்ட
எம் தங்கத் தலைவனின் காப்பில்

மகிழும் எம் தாயகத் தமிழன்னையே!
உன் மடியிற் துயிலும்
தியாகத்தின் முத்துக்கள் வித்தாகி
உன் தணியாத தாகம்,
தமிழீழத் தாயகம் உரம்பெற
வீரர்களாக மீண்டும் கிளர்ந்தெழுவர்!
புலிகள் தமிழ்மண்ணின் காவலர்கள்!
புலிகளின் பலம் அவர்களின் ஆயுதங்கள்!

புலிகளின் ஆயுதபலம் அரசை அடிபணிய வைத்தது,
பகைவர் சேனைகள் நிலைகுலைந்தன
படைத் தலைமைகள் தலை கவிழ்ந்தனர்.
தானைத் தளபதியின் கோட்டைக் கதவுகள் தட்டப்பட்டன:
தட்டியது யாருமல்ல!
சிங்கள அரசு சமாதானம் வேண்டி யாசித்து நிற்கிறது!!!
தமிழினமே! உன் நிமிர்ந்த தலை இனி
இறைவனுக்கன்றி வேறெவருக்கும் வணங்காது.

மறத்தமிழ் வீரா! நீ தனிமரமல்ல!
உலகம் முழுவதும் உன் உறவுகளே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரெங்கும் கமழ்வது தமிழ் மணமே!
நீ விழுதூன்றி விளைந்த ஆலமரம்
வாழ்வைத் துறந்து வித்தாகி விட்ட
கண்மணிகள் உன் வளர்ச்சிக்கு உரம்.
உலகிற் பரந்துபட்டு,
விரிந்த கடலும் பிரிக்காத உறவுகள்!

உன் செழிப்பிற்கு வளம்
உன் உறவுகள் அலைகளுக்கப்பால்,
அவர் தம் உணர்வுகள் உன் அருகில்
எம் தானைத் தலைவன் நாவசைத்தால்
விக்ரோரியா விதிகளில் காவடிகள் ஆடும்!
ஜெனீவா விதிகளில் பேரணிகள் தவழும்!
பாரிஸ் விதிகளில் ஆர்ப்பாட்டம் வெடிக்கும்!
நோர்வேயில் வீரக்கனல்கவிதை மழைபொழியும்!

பாரெங்கும் புதுப்பானை பொங்கும்!!
தமிழன் தலையிற் குட்டிய நாட்களும்
அவன் குட்டக் குட்டக் குனிந்த நாட்களும்,
அமைச்சுப் பொறுப்புக்கு விலைபோன
போலித் தலைமைகளும் வரலாறாகி விட்டன!
வீரத்தமிழ் மறவ! விறல்மிகு தமிழினம்
தன் குருதியில் ஒரு வீர வரலாறு
எழுதிக்கொண்டிருக்கிறது

ஈழத் தமிழர் தாயகம் உலகிற்
பரந்துபட்டு வாழும்
தமிழரின் இதயபூமி!
இன்று தன் 51ம் அகவையிற்
தடம்பதிக்கும் தனிப்பெருந் தலைவன்
தமிழினத்தின் உயிர்நாடி.
மொழியால், மதத்தால், தாயகப்
பற்றினால் ஒன்றுபட்டார் தமிழர்!

நவீன தொழில்நுட்ப, கணனி
உலகமயமாக்கல் சவால்களை
எதிர்கொண்டு, அவை நமதாக்கி
வீரத்தமிழர் நாம் - புதுயுகம் படைப்போம்!

● ● ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடிமைகளா நாம்?

சீ.என்.துரைராஜா, சம்பந்தர் வீதி, திருகோணமலை

13

நாம் இருக்கும் நாடு நமதென நாம் அறிவோம்
கார் இருள் சூழ்ந்த கனகமணித் திருநாட்டில்
ஆங்கிலேயன் ஆட்சியினில் அடிமைகளாய் நாமிருந்தோம்
அவலத்தைப் போக்கவென அனைத்துஇனத் தலைவர்களும்
ஆர்ப்பரித் தெழுந்தார் அடிமை விலங்கொடிக்க;
பார்த்திருந்த ஆங்கிலேயன் பண்பான சுதந்திரத்தை
கோத்திரங்கள் குலங்கள் கொடிய இன வேறுபாட்டை
ஆத்திரங்களுடன் உடன்பாராது அமைதிவழி பேணி
சுதந்திர இலங்கையை 1948 மாசி 4ல்
பெருமைபட பேணி இலங்கைத் தலைவர்களின்
இணையின் மத்தியிலே சிங்கள ஆட்சியாளரை
சிரம் தாழ்த்தி படைவிலக்கி கொடுத்துச் சென்றான்!

ஆணவ மேலீட்டால் ஆட்சியின் அதிகாரத்தை
அகங்காரம் தனைப்பெற்ற சிங்கள ஆட்சியாளன்
சினந்தெழுந்தான் சீறிப்பாய்ந்தான் சிறுமதியனாய்
பாத்திரத்தைப் பாராமல் பண்புதனைப் பேணாமல்
இந்தியத் தமிழர்களின் வாக்குரிமை வழங்கலை
1949ல் பறித்தெடுத்தான் பாராளுமன்றினிலே
எட்டு உறுப்பினர் எமது இனம் காக்கவென
இருந்திட்ட வேளை எமதருமை தமிழினத்தை
சூழ்ச்சியின் பெயராலே சுதந்திரத் தமிழினத்தை
வாக்குரிமை பறித்த வரலாற்று நிகழ்வுதனை
தந்தை செல்வாவோ தாளாத துயரம் கொண்டு
தமிழரசுக் கட்சியெனும் தன்மான இயக்கமொன்றை
1949ல் ஆணித்தரமானஆணையாக ஆக்கிக்கொண்டார்;

டி.எஸ்.சேனநாயக்காவின் திருகுதாள வேலைகளை
தன்கட்சித் தலைவர்களால் பொறுக்கமுடியா பண்டாரநாயக்க
சுதந்திரக் கட்சியெனும் சுயசிந்தனைவாதிகளால்
1952ம் ஆண்டளவில் ஆக்கினார் ஓர் கட்சி!
சமஷ்டி எனும் பெயர்கொண்ட சமத்துவக் கொள்கையை
பாராளுமன்றினிலே பக்குவமாய் வைத்துவிட்டார்
இனவெறி சிங்களவரின் ஏகாந்த போக்கால்
படைத்தவனே கொள்கையை பாதியிலே கிழித்தெறிந்து
சிங்களம் மட்டுமே சீராட்டும் மொழியாக
சட்டசபை தனிலே சதிராட விட்டுவிட்டார்;

இரண்டு மொழி ஒருநாடு! ஒருமொழி இருநாடு!!
இடதுசாரிக் கொள்கையிலே இறும்பூதி நின்ற
கொல்வின் ஆர்டி சில்வாவின் கூற்றையும் கொள்ளாது
நாடுதனை ஆண்ட சிங்கள தலைவர்களின்
கொடுமை பலகண்டு கொதித்தெழுந்த தமிழினம்
ஸ்ரீ-எதிர்ப்புப் போராட்டம்! சத்தியாக்கிரகம்! என
அகிம்சைவழி நின்று செய்தே பார்த்தார்கள்!
பண்டா-செல்வா, டட்லி-செல்வா ஒப்பந்தம் பலசெய்து
உடன்பாடு காணாது உருக்குலைந்த ஊமைகளாய்
தமிழன் தன்மானம் காக்க சமஷ்டி என்றும்
மாகாணசபை என்றும் மாவட்டசபை என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார வரம்பினை அடுக்கடுக்காய் கேட்டுநின்றார்!

அதிகாரத் திமிர்கொண்ட ஆணவ ஆட்சியாளர்
அஹிம்சைவழி போராடிய அடிமைகளென நினைத்து
விடுதலைவேட்கையை வேரறுக்கப் புறப்பட்டார்
தந்தை செல்வாவோ வேறுவழியின்றி மனம் நொந்து
தனிநாடு பிரகடனத்தை மொழிய வேளைவரும்
காலம் நோக்கி வீராப்புடன் காத்திருந்தார்
1974இல் உலகத் தமிழர் எழுச்சி மகாநாடு
சங்கிலியன் ஆண்ட யாழ்ப்பாண மண்ணிலே
பெரும்புகழ் விளங்க பெருமூச்சாய் தமிழர்கள்
நடாத்திய பெருமைதனை பொறுக்காத காவல்படை
ஒன்பது உயிர் எடுக்க படைநடத்திய பெருநெருப்பில்
வீரசிங்கம் மண்டபத்தின் முன்னே
தேனெனும் இனிய திவ்விய மொழியாம் எம்
கற்கண்டோ கருப்பம் சாறோ எனத் தமிழை
சுவைத்துக் கொண்டிருந்த சுதந்திரத் தமிழரை
வித்துக்களாய் விலைகொடுத்தோம் வேள்வியிலே!

1958, 1977, 1983 என ஆண்டாண்டு காலமாய்
அணியணியாய் எம்மினத்தை காவுகொடுத்த
தமிழ்ச் சாதி கொழும்பு நகரினிலே கப்பலேறி
வடக்கு கிழக்கென்று வந்து
தன்மான தமிழினத்தின் பூமியென
அன்றே அச்சாரம் செய்தும் விட்டார்!
எலிவளையானாலும் தனிவளை வேண்டுமென்று
புறப்பட்டார் தமிழினத்தார் இளம் காளையர்கள்!

இயக்கங்கள்பல உருவாகி தன்நிலை தானுணரா
தமிழ்இயக்கங்கள் ஒவ்வொன்றும் தனிவழியே சென்று
இயக்க மோதலால் எம்மினத்தை நாமே அழித்தொழித்தோம்!
1983 கலவரத்தால் தமிழ்நாட்டையே அழித்தொழித்தார்;
இலங்கையின் வரலாற்றையும் உலக வரலாற்றையும்
ஓதி உணர்ந்து உயர்வுபெற்ற யாழ்ப்பாண
நூலகத்தை இனவெறி கொண்ட கொடிய பாவிகள்
அக்கினியின் பெயராலே தீயிட்டு கொழுத்தி
தீந்தமிழ் இனத்தின் கல்வியிலே கைவைத்தார்;
தமிழினத்தின் மூளைப்பலம் தனை உணராத
தறிகெட்ட வெறியர்கள் ஆலயங்கள் கோவிலென
அழகான தேர்களையும் அக்கினியுடன் சங்கமித்தார்!

திருக்கோணமலையோ பற்றி எரிந்தது காண்!
நாளும் பொழுதும் நயவஞ்சகப் பேர்வழிகளால்
அழித்தொழித்த சேதிதனை அகிலமே பார்த்திருந்தன!
பார்த்திருந்தோர் எம்நிலையை பலநாளும்
பார்த்து பார்த்து வெம்பித்துடித்தனர் வேறென்ன செய்தார்!
படிப்படியாய் ஆண்டுகள் பல பற்றி எரிந்த வட-கிழக்கு மக்கள்
உரிமைப் போரிலே உயிர்மூச்சாம் தனித்தமிழ் ஈழமமைக்கவென
தம்பி தலைமையிலே தனி இயக்கமாக நெஞ்சினிலே நஞ்சைக்கட்டி
நீண்ட போராட்ட வரலாற்றைக் காட்டிநின்றார்
தியாகதீபம் திலீபனின் போராட்டம் திக்கெட்டும் முழங்கும்
திசைதோறும் வக்கற்றோர் வகையற்றோர் எனப் பாராது
தாயின் மணிக்கொடிகாக்க ஒன்றுபட்டார் ஒருகொடியின்கீழ்!

கொப்பக்கடுவ எனும் கொடிய இராணுவத் தலைவன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடமராட்சி மண்ணிலே வழிநடத்திய போரை
மறந்துதான் விடுவரோ மானமுள்ள தமிழர்?
போர்க்கூட்டங்கள் புவியாளும் பேரினத்தால் காடு மேடு
பாராமல் கருத்துக்களை கேளாமல் கொன்று குவித்தார்!
யாழ்ப்பாணப் போரினாலே கோட்டை மதில்கள்
தூள் தூளாக்கப்பட்ட துயரக் காட்சியைக் கண்டும்
1990இல் இனக்கலவரத்தின்போது வடக்கு கிழக்கு மக்கள்
வகைதொகையாக பண்பாட்டுடன் வாழ்ந்த இடத்தை விட்டு
கப்பல் ஏறி கண்ணுக்கெட்டா தமிழகம் சென்றார்கள்!

கப்பல் ஏறிச் சென்றபோதும் கயவர்கள்
கடலிலே தொடர்ந்து எம்மினத்தை அழித்தார்கள்!
உலங்குவான்ஊர்தியின் குண்டுகளால்துளைத்தனரே!
கடலிலே காலமானவர்கள் கரைசேர முடியாது
கண்கலங்கிக் கரைந்தோர் எத்தனைபேர்?
இறைவா! எம்மையேன் இலங்கைத் தீவினிலே
ஈனப் பிறவிகளாய் ஏன்தான் படைத்தாய்?
தமிழகத்தினிலே பிரதமர் ராஜீவ் காந்தி கொலையாலே- அங்கு
தன்மானம் இழந்து தரித்திரராய் வாழ்ந்தோம் வகையறியாது!
கோணல் புத்திக் காரர்கள் கப்பலேற்றி அனுப்பென்று பறைசாற்ற
கொஞ்சம் கொஞ்சமாக கப்பலேறி வந்துவிட்டோம்!

வந்த மக்களை வாழத்தான் விட்டார்களா வஞ்சகத்தார்
சுற்றிவளைப்பு, சூழ்ந்து தேடுதல் ஆட்பிடிப்பதும் அழிப்பதுமாய்
பேரின சக்தியின் பெருநெருப்பின் மத்தியிலே
சந்திரிக்கா அம்மையாரின் ஜனாதிபதி தேர்தலிலே
ஆதரித்தோம் வட-கிழக்கு மக்கள், ஆனார் ஜனாதிபதியாக
இனத்தைக் காக்க இருள்கிழித்து முகில் எழுவதுபோல
பண்பான மனிதராய் பவனிவந்தார் ஜனாதிபதியாக
பேரினவாதிகளின் பெருமூச்சால் தன்கொள்கை தானேவிட்டு
ஆட்சியின் அதிகார வெறிதன்னில் ஆடினார் இலங்கையில்
ஆட்சியின் மாற்றத்தால் ஆனார் ரணில் பிரதமராக
புரிந்துணர்வு ஒப்பந்தம் புலிகளுடனே செய்து
புரிந்தார் புதியதோர் சாதனையை இலங்கை மண்ணில்!

ஆட்டத்தின் ஓட்டத்தை நோட்டமிட்ட தம்பி பிரபாகரன்
உண்மையின் தத்துவத்தை உணர்ந்துகொண்டதனால்
நின்று நிதானமாக பேச்சுவார்த்தை என்ற போலி
நாடகத்தை பொறுமைகாத்து நின்றபோதும்
மீண்டும் சந்திரிகா ஆட்சியின் அதிகாரம்
ஜே.வீ.பீ.. ஜாதிக்க ஹெல உருமய கட்சியினரின்
இனவெறி ஆட்டத்திலிருந்து மீட்டார் தமிழினத்தை
தமிழினத்தின் தவப்பயனால் வந்துதித்த தம்பி பிரபாகரனின்
பொறுமையெனும் நிதானப் போக்கால்
இடைக்கால சபை தன்னை இயம்பியே நின்றார்

அறுவைச் சிகிச்சையினால் அறுத்துவிட நினைத்த
அண்ணல் அவதாரமோ தம்பி பிரபாகரன்
மீண்டும் பொறுமைகாத்து புகழின் உச்சிக்கே போனார்
உரிமைப்போரின் உணர்வதனை உணராத
உலுத்தர் கூட்டம் உணரவென இயற்கை
சுனாமியெனும் பெயரில் சதிராட்டம் ஆடிய
அனர்த்தத்தை நேசமனப்பான்மையுடன் நீட்டிய
கைகளை - நெருப்புக்கள் நீறுபூக்கும் எம்மினம்-
இறுகப்பற்றி இனமத பேதம் பாராது மனித

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சேவை செய்ததனாலே உலகம் போற்றி மண்ணில்
உயர்ந்தே நின்றனர் உண்மைத் தமிழர்கள் காண்;

சந்திரிக்கா அம்மையாரின் சதிராட்ட விளைவினால்
சஞ்சலமே மிகக்கொண்ட ஜேவீபீ, ஜாதிகஹெல உருமைய
தமிழினத்துக்கு இல்லை தனியாட்சி தனிஉரிமை என்றார்!
போர்க்கொடி தூக்கி புயல்பரப்பப் புறப்பட்டார் அபுனிதர்
கூட்டாட்சித் தத்துவத்தின் குரல்வளை நெரிக்கப்பட்டு
சந்திரிக்கா அம்மையாரோ சன்னதமே ஆடிநின்றார்!
பதவிப் போட்டியின் பரிணாம வளர்ச்சியை ரணில்
பக்குவமாய் எடுத்துரைத்து ஜனாதிபதி தேர்தலை
2005.11.17ல் நடாத்தியே தோல்வியுற்றார்!

வடக்கு-கிழக்கு மக்கள் ஜனாதிபதி தேர்தலை
வரைமுறையாக பகிஷ்கரித்தே நின்று தமிழன்
பண்புதனை உலகறிய பறைசாற்றியே நின்றனர்
மகிந்த ராஜபக்ஷா மாண்புடன் நிமிர்ந்து நின்று
பேரினவாதிகளின் பெருமதிப்புப் பெட்டகமாய்
மாண்புடன் ஜனாதிபதியானார் இலங்கை ஆட்சியில்
ஜனாதிபதி மஹிந்தாவோ பாராளுமன்றிலே சிம்மாசன
பிரசங்க வெளியீட்டில் ஒற்றையாட்சி நாடாக
உறுதிபட எடுத்துவைத்தார் தன் இனம்மனம் மகிழ!

தமிழ்த் தேசியத் தலைவனோ தன்குணம் தானேகொண்டு
பொறுமையெனும் வேள்வித் தீயில் பொன் எழுத்துக்களாய்
குறுகிய கால அவகாசம் தந்து பொறுமைகாத்தான்
தமிழர் தாகம் தமிழ் ஈழ தாயகம்! என உரத்துக் கூறியதால்
உலகமே அவன் உரையை புகழ்ந்தே நின்றதுகாண்!

● ● ●






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயகம் காண எதிர்காலமும் உண்டு!

ஏ.கலைச்செல்வி, கம்பர்மலை, யாழ்ப்பாணம்

14

வெள்ளையன் விட்டுக் கொடுக்க
சிங்களவன் கையில் எடுக்க
சுதந்திரம் என்றார்கள்!
சுருங்கக் கூறின் அது
சூழ்ச்சி செய்த தந்திரம்!
நாற்புறமும் தமிழன்
நன்றாக வாழ்ந்ததால்
நசுக்கத் தொடங்கியது,
நரிக்குணம் படைத்த இனம்!

திம்புப் பேச்சு என்றனர்
தீர்ப்பு வழங்கவே இல்லை!
தீர்த்துக் கட்டுவதற்குத் தான்
தீர்க்கதரிசியாளன் ஒருவன்
தீர்மானித்தான், நாம்
தீக்குள் நின்றால் தான்
தீர்வு கிடைக்கும் என்று!

காலடி எடுத்து வைக்க
கலங்கியது எதிரி- விளைவு
யூலை என்பது இப்போ
கறுப்பு ஜுலை ஆகியது!
கரும்புகைக்குள் காவியங்களை
காடையர் கடைந்தெடுத்தனர்!
அன்று தொடக்கம் தான்
அகதி வாழ்க்கை ஆரம்பம்!

ஊருக்குள் இடம்பெயர்வு தொடங்கி
உலகம் வரை நீண்டது!
உயிர் காணும்! என்று பலர் ஓட
உரிமைவேண்டும்! என்று சிலர்போராட
உறுதியும் பிறந்தது!

லிபரேசன் ஒப்பரேசன்! என்றார்கள்
லெப்டினன் கேணல்கள் பலர்
லேசாக வந்திறங்கி
ரோசாப்பூத் தோட்டங்களை
பிணத்தோட்டம் ஆக்கினர்!
பதுங்கு குழிகளில் கொஞ்சம்
பாலங்களில் கொஞ்சம்
பனந்தோப்பில் கொஞ்சம்
பள்ளங்களில் புதைக்கப்பட்டது கொஞ்சம்!

சுற்றி அழ யாருமில்லை!
சுமக்கக் கூட ஆளில்லை!
சுமைகள் மட்டும் மனதில்
சூட்சுமமாகத் தெரிகிறது!
அமைதிப்படை என்றார்கள்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவைத் தடுப்போம் என்றார்கள்,
அடங்கி ஒய்யாரமாய் வந்தார்கள்,
ஆட்டாமா முதல் அரிசி வரை
அள்ளி அள்ளித் தந்தார்கள்!
ஆகியது சிலகாலம்!
ஆரம்பித்தது அரக்கர் குணம்
அழிக்கத் தொடங்கியது,
அன்னையர் முதல்
அப்பாவிகன்னியர் வரை
கற்பிழந்தனர்!
குழந்தைகள் முதல்
முதியவர் வரை உயிரிழந்தனர்!
செல்வந்தர் முதல் வறியவர் வரை
சொத்திழந்தனர்!

இது தொடர ஒரு வழிபிறக்க
அந்நியப்படை அஞ்சி ஓடியது!
துன்பம் மட்டும் தொடர்கிறது
பொருளாதாரத் தடை என்றனர்!
போகும் வாகனம் முதல்
பொங்கும் அரிசி வரை தடை!
வறுமை தலைதூக்க
சிறுமை வேண்டாம்! என்று
சிலர் குருதி சிந்த
சிவந்தது மண்!
சிதறி ஓடிய எதிரிப்படை!

பொறுமை இழந்த இனம்
பொங்கிப் புயலாக
போராட்டம் புதுமை பெறுகிறது!
சென் பீட்டர்ஸ் தொடக்கம்
நாகர்கோவில் வரை
நாசமாக்கப்பட்டனர் நம்மவர்!
பள்ளிச் சிறுவரையும் பாடைக்கனுப்பியது
பயங்கரவாதம் என்று
வெள்ளைச் சிட்டுக்கள் 57 மேல்
வேடன் விட்ட குண்டால்
சிறகிழந்த சிட்டுக்களாய்
சிவப்பாகிப் போனதென்ன!
சிந்திய குருதிகளால்
சிவந்தது நம் இதயம் மட்டுமல்ல
ஈழமும் தான்!

சூரியக் கதிரென்று
சுட்டெரித்த இராணுவத்தால்
சுருங்கிப் போன தமிழினம்
சுக்குநூறாகியது!

ஊர் இழந்து உறவிழந்து
வீடிழந்து வாழ்விழந்து
வறுமைப் பிடிக்குள் நோயுற்று
நொருங்கிப்போன இதயங்களுக்கு
இனிப்பான செய்தியொன்று
இடறிக் காதில் விழ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேச்சுவார்த்தை! என்றனர்!
நோர்வே நடு இருக்க
நம்மவரும் தானிருக்க
இலங்கை அரசு தொடங்கியது
பேச்சு! பேச்சு!! பேச்சு!!!
பொல்லாப் பேச்சு! போரில்லாப் பேச்சு!
முடிவில்லாப் பேச்சு! முழுஉலகமும் பேச்சு!
பேச்சுக்கள் நடந்தன,
பயன் இல்லாப் பேச்சுக்கள்!

அரசு மாறியது அனைத்தும் மாறியது,
போர்கள் இல்லை போராளிகள் மாண்டனர்!
குண்டுகள் இல்லை குண்டர்கள் வேட்டை!
நிசமாய் யுத்தமில்லை நிழல்யுத்தம் தொடர்கிறது!
பதினெண்ணாயிரம் வித்துடல் விதைக்கப்பட
தமிழர் பயம் தெளிந்து தலைநிமிர
தனிப்படை தானுண்டு!
தவமிருந்து பெற்றெடுத்த
தானைத் தலைவனுண்டு!
தங்கைமாரும் சேர்ந்து நிற்கும்
தலை வணங்காப்படையும் உண்டு
தாயகம் காண எதிர்காலமும் உண்டு!


• • •


வெளிநாட்டவர்களும் கனடாவில்
தங்களது பெயரிலேயே வீடு வாங்கலாம்!!!
மேலதிக விபரங்களுக்கு...

ROYAL LEPAGE
Connect Realty
INDEPENDENTLY OWNED AND OPERATED BROKER

கரு கந்தையா
வீடு விற்பனை முகவர்
18 வருடங்களாக இத்துறையில் கனடாவில் முன்னணியில்...
அனுபவம்! அறிவு!! திறமை!!! பொறுமை!!!

• Real Estate Professional for 18 years.
• Multi Award Winner
• Ranking in 2005: Toronto East #1 - Ontario's Top 10 - Canada's #14
• Team Leader for over 30 Real Estate Professionals



Karu Kandiah FRI. CRES
Associate Broker

THE CHAIRMAN'S CLUB
NATIONAL
Award Winner
2003 & 2004
Top 1% in All Canada

Tel: 416-284-5555
Toll Free: 1-888-766-4456
880 Ellesmere Road. Suite 203, Scarborough, Ontario, Canada
Email: karu@royallepage.ca • Web: www.karuhome.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வண்ணத் தமிழின் ஈழம் மலர வரிந்த போராட்டமே!

கணியன் புலவனார் ச.இ.ஐங்கரலிங்கம், வவுனியா

15

இலங்கைத் தமிழர் எங்கள் இனத்தின் தனித்து வத்தை யிழப்பதோ
ஈழங் கேட்கும் இறுதிக் கட்டம் எங்க ளுக்கி லங்கையில்
கலங்க நாங்கள் கடுத்த லங்கா அரசு பாதை காட்டவே
காலஞ் செய்த கோலத் தாலே கடைசி யாட்டம் போரதே
துலங்க நாங்கள் ஈழந் துங்கக் கடைசி யாயே போரிடும்
சொல்லாத துயரம் ஈழத் தமிழர் துவேசச் சிங்க ளத்தவர்
மலங்க விழிகள் மனமும் உயிரும் ஆண வத்தால் மாயவே
வண்ணத் தமிழின் ஈழம் மலர வரிந்த போரின் ஆட்டமே

அந்நி யத்துத் தேசத் தவரும் நாற்பத் தெட்டில் அளித்தனர்
ஆன சுதந்தி ரத்தை யானால் அதுவெ மக்கு வதையதோ
மன்னு துன்ப மெமக்கி லையென் றெண்ணி யாங்கள் மகிழவே
வரிந்த இலங்கை ஒற்றை யாட்சி வகுத்த துன்பந் தமிழினம்
இன்ன லெய்த விலங்கை யிராசச் சிங்க ளத்தி னத்தவர்
எம்மைத் தாழ்த்தி மிதித்துத் தம்மின் இருப்பை யெமக்கி யமனாய்ச்
சொன்ன துன்பந் தொலைய நாங்கள் தொடர்ந்தே யாடும் போரதால்
சுதந்தி ரத்த மிழினந் துலங்கத் தகைந்தீ ழுந்தான் துதைந்துமே

சமட்டி கேட்டுத் தந்தை செல்வா தமிழ ரசுக் கட்சியாய்ச்
சாகும் வரையுஞ் செய்த தருமத் தன்மை யான போரினால்
எமனுக் கிரையாய் எவரும் ஆகா எத்த னைபோ ராட்டமே
எல்லா மாற்றி யீற்றில் மீதி இழித்த வாய்ப்ப ழிப்பதே
மமதைச் சிங்க ளத்து மக்கள் மலிந்த வொற்றை யாட்சியே
மல்லுக் கட்டி னாலும் உரிமை மறுப்ப தாய்வ தைப்பதே
எமையே யாங்கள் ஆளும் எங்கள் தலையின் விதியை யிலக்கதாய்
ஈழப் பொராற் சாத னைதான் எங்கள் தமிழி னத்துமே

நிலமி ழந்தோம் உயிரி ழந்தோம் நிறைய வடைமை யிழந்தனம்
நிட்டு ரங்கள் நித்த நித்தம் நெஞ்சங் கலங்க வைத்ததே
பலப லவாய் இலட்சொ லட்சப் பாவ மறியாத் தமிழரின்
பண்பு யிர்கள் பதைக்கக் கொன்றார் சிங்க ளத்துப் படைகளே
குலம களிரெந் தமிழர் மாதர் கோலக் கற்பு மிழந்தனர்
கொள்ளைப் பாலர் மாரைக் கொன்றே குவித்த சாயல் கொடூரமே
கலங்க லமாய்க் கடலில் விண்ணில் மண்ணிற் கடுத்த வூர்திகள்
கால னாயெ மைக்கொன் றொழித்தே கலங்க வைத்துக் களித்தவே

சோதனை னைமேற் சோத னைதான் இலங்கைத் தமிழர் வாழ்விலே
துரித மாய்ப்ப லவாய்ப் பேசித் தோல்வி தோல்வி யடைந்தவே
வேத னையின் விடுகை விந்தை விடுத லைப்பு லிகளும்
மேன்மை யீழத் தமிழர் ஒன்றி வேக மாயே போரிடும்
சாத னையால் சர்வ தேச வல்ல ரசின் கவனமே
தமிழ ருக்காய்த் தக்க நியாயஞ் சார்பாய்ச் சமட்டி சமையுமே
நீதி நெறியாய் நீண்ட போரால் எங்கள் கனவு நனவதே
நெஞ்ச நிம்ம தித்த கையாய் நீடித் துழைத்த நிறைவதே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் படையுஞ் சர்வ தேச வல்ல ரசார் ஏங்கிட
எங்கள் நியாயப் போராட் டத்தால் எமக்கு நிகரெ வருளார்
நலங்கொள் சுயநிர் ணயப்பொர் நம்மின் அடிமை விலங்கொ டியவே
நல்ல காலம் பிறந்த தெங்கள் வீடு நாடு மேடதே
இலங்கு மீழத் தமிழர் சமரால் இந்தப் பூமி யிதமுறும்
ஈழத் தமிழர் கண்ணீர் வாழ்க்கை இனியும் இல்லை யில்லையே
பலங்கொள் எங்கள் தமிழர் ஈழப் படைபெ லத்தாற் பாக்கியம்
பலரும் மகிழத் தமிழர் வாழ்வு பகலாய் என்றும் ஒளியதே

தமிழர் எங்கள் சோத னைதான் தமிழ்நாட் டார்க்கும் வேதனை
அமிழ்தின் இனிய தமிழை நாங்கள் அருமை யாக வாழவே
எமதீ ழத்தமி ழினமும் என்றும் இதந்து நன்கு வாழவே
ஈழத் தமிழர் பொருளா தாரம் இந்த வுலகி லோங்கவே
சுமையாய் நாங்கள் சுமந்த துன்பந் தொலையுங் காலந் தொட்டதே
தோற்றுப் போகும் இலங்கை யரசும் இலங்கைப் படையுந் துரிதமே
அமையும் அருமை யிற்றுத் தரத்தை அரசாம் இலங்கை தவறினால்
அடுத்த தங்கள் பரம்ப ரைக்கும் அவலத் துரோக மிழைத்தவே

(வேறு)

நலமி ழந்தோம் நிலமி ழந்தோம் நங்கள் தமிழின் அரசிழந்தோம்
வீடி ழந்தோம் நாடி ழந்தோம் காடு மேடெ லாமிழந்தோம்
இலமென் றெலாமி ழந்தோம் இனியி ழக்க வேது வெதுவுமிலை
எங்கொலு விழந்தே யிருகை கூப்பி யெதிரி கால்பணிந் திருப்பதுவோ
வலிமைப் பேரர சிந்தியா வுந்தான் வகையாய் நோர்வே வளநாடும்
விரும்பும் வல்லர சுகளெ லாமும் மனம்மிக வைத்து வாழ்ந்திடவே
பலபல வாறும் பக்குவ மாய்ச்சீர் செல்வங் கொழிக்கும் வளநாடாய்ப்
பண்டைய ஈழத் தமிழர சைத்தான் பாரி லுயர்த்துஞ் சாதனையே

(நேரிசை வெண்பா)

எந்துயர மெம்போராட் டஞ்சர்வ தேயமெலாஞ்
சிந்தித் தறியச் செயவைத்து விந்தையதாய்ச்
சாதித்த சாதனையால் தக்க சமர்தமிழர்
நீதிப் படுத்தினோம் நின்று

(குறள் வெண்பா)

இன்னலெலாந் தீர்ந்தே இலங்கைத் தமிழ்மக்கள்
நன்னிலைக ளெய்தவீழ நாடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## –மிதித்தனர் மேன்மை வற்ற!

திருமதி ஆர். அப்புத்துரை, கொழும்பு 13

16

அன்பினால் ஒன்றி ணைந்தோம்
அகநிறை இன்பந் துய்த்தோம்
இன்பினை எளிதிற் சேர்க்கும்
எழிலுரு என்ன லாகும்
சுந்தரன் ஆய சேயைச்
சுழித்திடச் சிரிப்பான் தன்னை
என்றுமே அணைத்தின் புற்றோம்
எய்துநற் பயனீ தாமே!

தாதவிழ் மலரி னீட்டம்
தகுமழ கதுவே யாகும்
மாதவன் எமது சேயின்
மகிழ்ச்சியிற் குதூக லிப்போம்
ஈதலும் அரவ ணைப்பும்
எய்தியே எமது வாழ்வு
தீதகல் நெறியி னூடே
சென்றது சிறப்புற் றோங்கி.

ஓங்கிவாழ் வொளிர்ந்த வேளை
உத்தர இலங்கை மண்ணில்
தேங்கியே தமிழர் வாழும்
சீருறு தாய கத்தில்
தாங்கிய துவக்கி னோடு
தாக்கிடு மிருக மாகித்
தீங்கிழைப் பதுமே நோக்காய்ச்
சீயவா ரிசென வந்தார்

வந்துவீட் டினரை முன்னே
வரிசையாய் நிற்க வைத்துப்
புந்தியிற் பட்ட வாறு
புகுந்தறைப் பொருளை யெல்லாம்
குஞ்சணை கோழி போன்று
குதறியே குழப்பி அந்த
வஞ்சகர் சுருட்டிக் கொண்டார்
வளம்நிறை பொருளையெல்லாம்

எல்லையில் கொதிப்பில் வந்தோர்
எழில்நிறை கலைக்கோ யில்கள்
இல்லையென் றாகத் தீவைத்
தெரித்ததன் அழகு கண்டார்
வல்லமை உடையோர் ஏதோ
வழங்கியே வாழ்வு கண்டார்
மெல்லியல் பினரை மேலும்
மிதித்தனர் மேன்மை வற்ற

வந்தனைக்குரியோர் தம்மை
வலிந்திழுத் தவம தித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெந்திட வைத்தார் பெண்கள்
விளங்கிடு கற்பை மாய்த்தார்
சுந்தர இளைஞர் கூட்டம்
துடித்திட உதைத்தும் மேலும்
வந்திடென் றழைத்தார் நான்காம்
வானுயர் மாடி காட்ட

காட்டினர் தலைகீ ழாகக்
ககனமீ தாடு வோரை
ஊட்டிய தாக சாந்திக்
குரியநீர் மூக்கிற் செல்ல
மாட்டிய பையி னூடு
மனோகர மிளகாய்த் தூபம்
கூட்டினர் குமரர் கொண்ட
கோலத்திற் தவறு முண்டோ!

சொல்லவே நாவெ ழாது
துயர்தரு வாதை கண்ணில்
மெல்லவே பட்ட தாயின்
மிகுமயக் கயர நேரும்
துல்லிய மான கீழாஞ்
செயலுள அவற்றை இப்போ
சொல்லுதல் கூட வேண்டா
துரத்திடத் துணிய லானார்

ஆனவிக் கொடுமைக் காளாய்
அண்ணள வமைதி வேண்டி
நானிலத் தயலை வந்து
நலஞ்செயு முறவை நீத்துக்
கோனிலை வாழ்வைத் துய்க்கக்
கொழும்புமா நகரை நண்ணிக்
கானலை நீராக் காணும்
கற்பனைக் களத்து றைந்தோம்

உணர்ந்தனம் உலகோர் நோக்கில்
உயரிய தாகத் தோன்றும்
நிறைந்ததோர் வாழ்வில் நீடு
நிற்பது முடியா தாகும்
மறைந்தபே ரறிஞர் சொன்ன
மயக்கிதென் றறிந்து கொண்டோம்
சிறந்தது மேற்கு நாட்டைச்
சேர்ந்திடத் துணிய லுற்றோம்

துணிவினைத் துணையாக் கொண்டு
துணைவரை அனுப்பி வைத்தேன்
அணிகலன் அனைத்தும் விற்றேன்
அயலினிற் கடனும் பட்டேன்
மணிமொழி மைந்தன் கல்வி
மாண்பினில் மகிழ்ந்து நின்றேன்
பிணியதென் றுணர்ந்த பின்னும்
பிரிவினை விழைந்தேன் ஆற்றேன்

ஆற்றுதற் கரிதே யான
அகத்தினை அடைவு வைத்துத்
தேற்றிடத் துணிந்தேன் செய்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேதெனத் தெரித லில்லேன்
மாற்றமொன் றொளிர நேரே
மற்றவர்ச் சேரல் வேண்டிக்
கோற்றுணைப் பணிப்பைக் காணுங்
கொள்கையின் வழியில் நின்றேன்

நின்றனன் விண்ணப் பித்து
நேரிதாய் மகனை என்னை
ஒன்றிட அனும திப்பீர்
உண்பதற் குழைப்பு மில்லை
என்றெமை இழந்து நின்றோம்
எப்படிப் போனார் என்றார்
குன்றினம் குறுகி னோமே!
கோனிலை மறுத்த தம்மா

அரவணைத் தன்பு காட்டும்
ஆர்வலர் அப்பா வேண்டும்
இரவலன் ஆக வேண்டா
இப்பவே வருக என்பேன்
புரமெரித் தவன்மே லாணை
புனைகதை யில்லை உண்மை
இரவெடுத் தவற்குச் சொன்னேன்
இங்குநீர் வருக வென்றே

அப்பரும் வந்து சேர்ந்தார்
அடுத்தெது நடக்கு மோதான்
இப்படி யாகச் செய்கை
இறுதியைக் காணு மென்று
சொப்பனத் தினிலும் யாமோ
துணிந்திலம் வடக்கு நோக்கி
இப்பவே தொடர்வோ மென்னச்
சூழ்ந்துநாம் தொடரு கின்றோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏன் எம்மவர்க்கு இந்த நிலை?

மரியநாயகம் டொறின், நாச்சிக்குடா

17

தொன்று தொட்டு தமிழ் அன்னையின்
மடிதனில் தமிழன் வேதனை தனை தாங்குவதா?
சோதனை தாங்குவதா? சாதனை தான் படைப்பதா?
ஏன் எம்மவர்க்கு இந்நிலை?

போர் என்றவுடன்
ஊர் தனை இழந்தோம்!
உறவு தனை இழந்தோம்!
தமிழன் என்று வாழ்ந்தவர்கள்
அகதிகளாக மாறினார்கள்!

இனவாதம் என்றவுடன்
தமிழன் வேறொருவன்
அவனை தெரியாது!
அவன் யார்? அவன் யாரோ? என்கின்றனர்.

சாதி என்றவுடன்
தமிழன் பறச்சாதி!
கீழ்ச்சாதி!
ஒழுக்கமற்ற சாதி!
இப்படியாக அலங்கரிக்கப்படுகின்றான்

மொழி என்றவுடன்
தமிழ் மொழி மதிப்பற்றது
அழகு அற்றது!
கயமை என்கிறார்கள்!
பகைமை என்கிறார்கள்!

உலகினில் கடவுள்- அவர்களையும்
எங்களையும் ஒன்றாகத்தானே படைத்தார்!
இன,மத,மொழி வேறுபாடு காட்டவில்லையே!
மனிதன் காட்டுகிறானே!

மனிதர்களால் தானே மனிதர்கள்
அடித்து நொறுக்கப்படுகின்றனர்!
தமிழன் என்றவுடன் நெருப்பாய் எரிகின்றனர்!
தமிழன் நெருப்புத் தானா? புரியவில்லை.

ஏன் எம்மவருடன் வெளிவேடம்
ஏன் எம்மவருடன் தான் பகைமையா?
ஏன் எம்மவருடன் தான் பொறாமையா?
ஏன் எம்மவருடன் தான் கயமையா?

ஏன் எம்மவருக்கு அடிமை வாழ்வு?
ஏன் எம்மவருக்கு ஒடுக்குமுறை?
ஏன் எம்மவரைப் பழிவாங்கல்?
ஏன் எம்மவரை அடக்கி வாழ்தல்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் தமிழன் என்றவுடன் நகைப்பு?
ஏன் தமிழன் என்றவுடன் வெறுப்பு?
ஏன் தமிழன் என்றவுடன் அடிமை?
ஏன் தமிழன் என்றவுடன் ஓரப்பார்வை?

ஏன் சாதி மத வெறி எம்மவர்க்கு?
ஏன் இன வேறுபாடு எம்மவர்க்கு?
ஏன் குல வேறுபாடு எம்மவர்க்கு?
ஏன் இங்கு வேதனைகள் புரியவில்லை!

ஏன் எம்மவர் மீது இனவெறி?
ஏன் எம்மவர் மீது பயங்கரவாதம்?
ஏன் எம்மவர் மீது வீண்பழி?
ஏன் எம்மவர் மீது துரோகம்?

ஏன் எம்மவர்க்கு அநீதி?
ஏன் எம்மவர்க்கு இனவெறி கொண்ட படையெடுப்பு?
ஏன் எம்மவர்க்கு அடக்குமுறையான வாழ்வு?
ஏன் எம்மவர்க்கு பகை? புரியவில்லை!

எம்மவரை எத்தனை தடவை அச்சுறுத்தினார்கள்?
எம்மவரை எத்தனை தடவை அச்சத்துக்குள்ளாக்கினார்கள்?
நாட்டைவிட்டு ஓடச் செய்தார்கள்?
எத்தனை சோதனை! எத்தனை வேதனை!!

ஏன் எம்மவர்க்கு தீயது?
ஏன் எம்மவர்க்கு வஞ்சகம்?
ஏன் எம்மவர்க்கு அநீதி?
புரியவில்லை விடை தேடுகின்றேன்!

ஏன் தமிழனும் வாழ்பவன் தானே?
ஏன் அவனுக்கு இவ்விடம் இல்லை?
ஏன் அவனுக்கு நிவாரணம் குறைவு?
ஏன் அவனுக்கு சுதந்திரம் இல்லை?

ஏன் எம்மவரிடம் இரத்தம் சிந்திய சிவப்புப் புறா?
ஏன் எம்மவரிடம் பொருளாதாரக் கஷ்டம்?
ஏன் எம்மவரிடம் வறுமை?
ஏன் எம்மவரிடம் பீதி?

எத்தனை எத்தனை அடக்குமுறைக்குள்?
எம்மவர் அடிமைத்தளை அறுத்துவிட்டு,
கயமைதனை வெட்டிவிட்டு, பொங்கியெழுந்தார்
சாதனைகளைப் படைக்க!

எத்தனை நாள் தான் எம்மவர்க்கு இந்த அவல வாழ்வு
எத்தனை எத்தனை துயர் இருந்தாலும்
எத்தனை எத்தனை பிரச்சினை இருந்தாலும்
எத்தனை எத்தனை எதிர்ப்புகள் வந்தாலும்
தமிழ் மானம் காக்கவென்று
தமிழின் பெருமைதனை உயர்த்தவென
பொங்கியெழுந்தான் சாதனை வீரனாக
தமிழரின் கண்ணீர் தனைத் துடைக்க

• • •


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைபிரியாதிருந்திடுவோம்! தமிழ்த்தாயைப் போற்றிடுவோம்!!

சோ.மோகன்ராஜ், புனே, மும்பாய்

18

ஓ சோலைக் குயில்ப் பேடுகளே!
சொக்கத் தமிழ்ப் பிள்ளைகளே!
சோலை மலர் முல்லைத் தமிழ்ச்
சொல்லைத் தரும் அறிஞர்களே!
நார் மணம் வீசும் நள்ளுனராம்
நார்வேத் தமிழர் நடத்துகின்றார்
பார் புகழ் பேசும் பைந்தமிழில்
பாங்காய்க் கவிதை போட்டிதனை!

இசைபட வாழ்ந்திருந்த இலங்கைத் தமிழருக்கு
இன்னல்இடர் விளைத்து, வசைபாட வந்துதித்தார்
வகையாக நான்கைந்து, நாய் மதியா நரிமதியார்!
ஆகையினால் ஓர்ந்திங்கு தந்திட்டார் தகையாக
இலங்கைத் தமிழ்பேசும் மக்களின் வேதனையும்
சோதனையும்- சாதனையும் என்கின்ற தலைப்பினையே
கண்டதும் காதலென்பர், காணாமலே காதல் கொண்டேன்!
கவிதைத் தலைப்பினையான் உள்ளூற்ற போழ்தினிலே

உள்ளுணர்வின் ஒளியினிலே உணர்ந்ததனை உரைத்திட யான்
சொல்தேடிச் சோர்ந்திருந்தேன் கண்ணுற்றேன் கண்முன்னே
எந்தாய்த் தமிழ்த்தாய்! எனக்கீந்தாள்சாய் தூரிகையை
விந்தைப் புது-மையால் வரைந்திடுவாய் எனமொழிந்தாள்
சந்தையிலே எனதுணர்வை செப்பிடுவேன், செவிமடுப்பீர்!
மந்தைவெளி மலர்வெளியில் மொய்த்திடுவீர் என்மொழியை
சிந்தை சிரமேற்றி சீராகச் சொல்லிடுவேன் - செந்தமிழர்
நிந்தையெல்லாம் போக்குதற்கு பாங்கான நீதிநெறி

இறைவன் என்றொருவன் இல்லையிந்தக் கூவில்
இறைமை ஒன்றே மெய் என்றுணர்வீர் நன்றாய்
இணை இல்லா இவ்வுலகில் ஈரினம் தான் உண்டாம்
இழியோர் ஓரினமாம் மற்றொன்று தமிழினமாம்
இடைகாட்டித் தொடைகாட்டி இன்னபிற நடைகாட்டி
தடைபோட்டுப் பிரித்தாளும் புலையோரே இழியோர்
அன்பினையும் அறத்தினையும் காதலையும் வீரத்தையும்
பண்பெனவும் கண்ணெனவும் கொண்டோரே தமிழர்

இயற்கையோ டிணைந்து இன்புறவே வாழ்ந்திருந்த
இலங்கைத் தமிழருமங் குழைப்பால் உயர்ந்திருந்தார்
மயிலாடும் கானகத்தே மகிழ்ந்தங்கே பாடுபட்டு
குயில்பாடும் சோலைகளில் சோர்வின்றி உழைத்தவர்கள்
உரிமை பறித்திடவே குள்ளநரி மதியுடையோர்
குறிவைத்தார் தமிழர்களை! வேதனையின் ஆரம்பம்
உழைப்பின்றி உண்டிருக்கும் வீணர்களும் ஈனர்களும்
உயர்தமிழைத் தாழ்த்திடவே விளைந்தார்கள் பின்னே

தனக்கோர் இடரென்றால் தடத்திடலாம் அன்பால்- அன்னைத்
தமிழுக்கோர் இழுக்கென்றால் பொறுத்திடவா செய்வார்?
அவைகளிலும், சபைகளிலும் வாதிட்டுப் பார்த்தார் - கொடும்
பகைவோரோ பணியாமல் பகைமேலும் வளர்த்தார்-உடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அயராது உழைத்தார்கள் - வளமெல்லாம் சேர்த்தார்கள்
தன்னாட்டு உயர்வுக்கு தடையின்றித் தமிழரெல்லாம்
பார்த்தார்கள் பகைவோர்கள் பதைத்தார்கள் நெஞ்சில்
எரித்தார்கள் தமிழர்களை அக்கினியால் அன்று

பித்தர்களின் பேயாட்டம் புத்தரவர் பார்த்திருந்தால்
சத்தியமாய் கண்ணீரில் கரைந்திருப்பார் நித்தியமாய்!
சித்தமதில் பித்தம் கொண்டு புத்திகெட்டு போனவர்கள்
சத்தமின்றி சலனமின்றி மெத்தனமாய் பகைவளர்த்தார்
ஓரெட்டில் சாவுண்டு ஆரெட்டில் சாவுண்டு பார்ப்பானை
பார்த்திடவே படைகொண்டு புறப்பட்டார் - தமிழரெல்லாம்
தன்மக்கள் வேதனைகள் தாங்காத தமிழன்னை தமிழர்
தன்மானம் காத்திடவே உவந்தீந்தாள் ஓர் பிள்ளை!

வீரத்தமிழர்களின் வலிமைதனை எதிர்கொள்ள
தீரமற்ற கோழைகளும் திண்டாடிப் போனார்கள்
நரிமதி ஈனர்தம் தந்திர வித்தைகளால் - அண்டை
நாட்டரசை அழைத்தார்கள் அமைதிகாக்க
வேதனையில் உழன்றிருந்த வீரத் தமிழருக்கோ
சோதனையாய் வந்தார்கள் அண்டை அரசுபடை
மத்தளத்து பக்கம்போல் மதில்மேல் பூனைபோல்
பத்திரமாய்ப் போராடி புரியவைத்தார் தம்கதியை உலகினுக்கு

இனமானம் காத்திடவே எழுச்சிபெற்ற தமிழர்களின்
மனங்களிலே மாயையென்னும் பேய்புகுத்த
எத்தனித்தார் எதிரிகளும் வெற்றிகண்டார் - ஒரு சிலரின்
புத்திகளைப் பேதலிக்க வைத்துவிட்டார் - பிரித்துவைத்தார்
வேதனைகள் சோதனைகள் பலவற்றைக் கடந்தபின்னே
சாதனையாய் செய்தார்கள் தமிழீழக் கோரிக்கை
உலகத்து நாடெல்லாம் இவர்வேண்டும் கோரிக்கையை
இலகாகத் தந்திடுவீர் என இழியோரை இடிக்கின்றார்

இழியோரோ இன்றுவரை இறங்கிவர மறுக்கின்றார்
இனியேனும் சிந்தித்து செயற்படுவர் என எண்ணி
இலங்கைத் தமிழ்மக்கள் இருக்கின்றார் போரின்றி
இனிப் போதும் வகையாகத் தமிழ் போற்றும் நாடெல்லாம்
இலங்கைத் தமிழருக்கு தந்திடுவீர் தனி ஈழம் - தம்
இலக்காம் சுதந்திரத்தை கொடுத்திடுவீர்
அதிகாரம் போற்றுகின்ற வீணர்களும் - ஆணவம் கொண்டிருக்கும்
மதவாத ஈனர்களும் மறுக்கின்றார் இவருரிமை

இன்று இங்கே நாளை எங்கோ
இணைந்து நாம் கூடிவிட்டோம்
இறுதிவரை உறுதியுடன் - இன்தமிழர்
இடர்போக்கி - பட்டமரம் தளிர்த்தங்கே
இனிமை இலை துளிர்த்தங்கே
இணைபிரியா திருந்திடுவோம் தமிழ்த்தாயை போற்றிடுவோம்.

● ● ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோர்வே நற்றமிழன் நல்லிணக்கம் காணட்டும்!

எஸ்.சுப்பையா, தாராவி, மும்பாய், மகாராஷ்டிரா

19

உலகமது சுழற்பந்து போல் சுற்றுகிறது
கலகமின்றி நீரும் நிலமும்
பணியாற்றுகின்றன!
பல நாடுகள் பல வடிவங்களில்
தோன்றுகின்றன எனில்
இலங்கை மட்டும் ஏன்
முட்டை வடிவுற்றது? எனச் சிந்திக்க
சாட்டை கவி உரு பெற்றது-ஆம்
இலங்கையில்
ஆண் தமிழன் என்னும்
வெள்ளைக் கருவும்
பெண் சிங்களன் என்னும்
மஞ்சள் கருவும் கலந்திருக்க
அடைகாத்து பாதுகாத்தால்
உடைபட்டு பிறந்து வரும்
உலகிற்கு சமாதானப் புறாவொன்று
ஓர் உயிர் பிறப்பிற்கு
இரு கரு தேவையென
இறைவன் வகுத்த நீதியெனில்
கருக்களைப் பிரித்தல் அநீதி!

இந்தியா பலமொழி பேசுகிறது எனில்
ஒன்று பட்டு நிற்கிறது இந்தியன் என்று!
இதுதான் மனித நேயம்!
இலங்கைத் தமிழர்களின்
வேதனையையும் சோதனையையும்
உலக நாடுகள் அறியும்!
உழைப்பிற்கெனப்
பிறந்தவர்கள் தமிழர்கள்!

உலகெங்கும் தான்
இருக்கிறார்கள் மனிதர்களாக எனில்
நோர்வே நற்றமிழர்
ட்றம்மன் நட்புறவு கழகமே! உன்
சிந்தனையால் தான்
தமிழினம் தலைநிமிர்கிறது!
சாதனை படைக்க நீ
முன்வந்தமையால் தான்
நடந்த சம்பவங்களுக்காக
இலங்கை முன்னாள் அதிபர்
திருமதி சந்திரிகா குமாரதுங்கா அவர்களே
மனம் வருந்தி விட்டார்கள்!
"என்னை விடுதலைப்புலிகள்
விட்டுவிடுவார்கள்" என்று
வார்த்தைகளோடு செய்திகள்
வெளிவந்துவிட்டன,
முடிந்த சம்பவம் தான்!
ராஜீவ் காந்தியின் படுகொலைக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பந்தப்பட்டவர்கள்
மனம் வருந்தி விட்டார்கள் - எனில்
இந்திய நாட்டின்
ஏழை, எளிய மக்களின்
ஒளிவிளக்கு ராஜீவ் காந்தி
அத் தலைவனை இழந்த
பலகோடி பாமர மக்களின் சார்பாக
வேண்டுகிறேன்
இலங்கைக்குள் போர் வேண்டாம்
இருவரும் இணைந்திட
அதற்கோர் வழிகாண்போம்!

இயற்கை அன்னையின்
கடுங்கோபம் ஒருபக்கம்!
தீவிரவாதிகளின்
போராட்டம் மறுபக்கம்!
வறுமைப் பிடியில்
சிக்கித் தவித்த பாரதியும் பாடினான்
சிங்களத் தீவினுக்கோர் பாலம்
அமைப்போம் என்று!
வறுமை நெருப்பினும் கொடியதென
வள்ளவனும் பாடிவிட்டான் - எனவே
தமிழ் இன ஒற்றுமையால்
நம்வாழ்வு வளம்பெற வேண்டும்!

இலங்கை தமிழர்களுக்காக
மும்பையில் போராடியவர்களின்
காயத் தழும்புகள் மாறாத நிலையில்
மன்றாடுகின்றேன்!
இலங்கைத் தமிழர்கள் என்றால்
அவர்களின் தமிழ் பேச்சில்தான்
மதிப்பும் மரியாதையும் கலந்த
தூய தமிழை
கேட்டு மகிழ்கிறேன்!- எனவே
அவர்களின் சாதனைகள் தான்
உலகிற்கோர் சவாலாக
கல்லில் உளி பட்டுத்தான் சிலை உருவாகிறது
கண்ணின் விழி திறந்தால் தான்
உலகம் தெரிகின்றது!- இதுபோல
அவர்களின் மனதில்
அன்பு, பண்பு, பாசம், நேசம்,
பணிவு என்னும் சமாதானம்
மலர, வளர, உலக தமிழ் இனம் ஒன்றுபட
வாய்மையே வெல்லட்டும்!- அதற்கு
இலங்கை ஒரு வழிகாட்டியாக
நோர்வே நற்றமிழனின் நல்லிணக்க
வெற்றிக்கொடி பறக்கட்டும்!
உலகம் கண்டு வியக்கட்டும்!

● ● ●


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைக் கடலில் முடுகியபோது!

பண்டிதர். எஸ்.அப்புத்துரை, கொழும்பு 13

20

"காகா" வென்றே கரைந்து செய்தியைப்
பாகா யுருகப் பரிவொடு சொல்லும்
நாவற் பழநிற நற்கருங் காக்கையே
போதற் குண்டோ புகல்வாய் வடக்கே
காவற் கடமை கருத்திலை யுனக்கு!

இன்றென் செய்தியை ஏற்றுத் துணிவோ
டுன்தன தாமென் றுழைப்பு வழங்கும்
பெற்றியை நீயே பிறரைக் கண்டிலேன்
பற்றுட னென்பணி பற்றுவை யறிவேன்
காக்காய் காக்காய் கார்வணத் தழகே
நீக்க மற்றென் நெஞ்சுறை மைந்தன்
இருபது நிறையு மிளவல் அவனை
இரண்டொன் றில்லை ஈராறு தடவை
சுரண்டும் பகுதித் துறையினர் கொண்டுபோய்

அப்பால் யானெதும் அறைவதற் கில்லை
அப்பா இந்நிலம் அடுக்கா தெனக்கு
எப்படி யாயினும் எங்கே யாயினும்
போக வேண்டும் பொல்லாப் பில்லை
காசோ ரெட்டுக் கணக்கொடு வருகெனத்
தொலைபே சியினிற் தொடர்ந்த செய்தியால்
மலைசுமந் தனைய மனப்போ ருடனாய்
படிகள் பலவும் ஏறி இறங்கி
விடிவிலை யெனினும் விளக்கம் பெற்று
ஒருமா திரியாய் ஊறிய தொகையொடு
வளையல் நெக்லெஸ் வைர மோதிரம்
சுளையாய்ப் பணந்தரு சுந்தர நீலக்
கல்லொன் றென்னுடைக் கனக மோதிரம்
எல்லாங் கொடுத்துப் பெறுமதி பெற்றதும்

சுந்தர ராற்றிற் சுலபமா யிட்டு
வந்தெதிர் குளத்தில் வளமாய்ப் பெற்ற
செய்தி நினைவைச் சிறைசெய் திடயான்
சென்றேன் நேரே செல்வம்ஸ் வர்த்தகர்
சின்னத் தம்பியாஞ் சீமான் கையில்
கொடுத்துப் பெற்றுக் கொண்டமைக் குறுதி
எடுத்துக் கொண்டு இனிச்செய வேண்டிய
அனுமதி பெறற்காய் அலுவலர் தமையணைந்
தனுதினம் வழிபட் டர்ச்சனை செய்து
திருமலை வழியாய்த் திருநகர் கொழும்பு
வருவதற் கென்று வாய்த்தது கப்பல்
முல்லைக் கடலில் முடுகிய போது
பேரிடி போன்றதோர் பெரிய சத்தம்

கூரிருளினிலே கொள்ளிவாற் பேயெனப்
பாரிய தீச்சுடர் படர்வது கண்டேன்
வாண வேடிக்கை வகைகோட் டைத்தீ
காண வெடித்திரள் கனல்வது போன்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் மேலும் வெடித்துக் கிளம்பின
மாலு முள்ளத்து மம்பர் நெஞ்சொடு
மேற்றளம் நின்றயான் மிகவிரை வாகக்
காற்றாய்ப் பறந்து கீழே பதுங்கினன்
காரிருள் வேளை கப்பலுள் ளினர்க்குக்
கடற்றிரு விழாவைக் காணவாய்ப் பில்லை
முடங்கிக் கிடந்து முனகியோர் கூட
எழுந்தனர் இருந்தனர் ஏதோ செய்தியால்
தொழுதனர் அழுதனர் தோத்திர மியம்பினர்
சிவபு ராணமும் செத்திலாப் பத்தும்
அவலம் போக்கு மடைக்கலப் பத்துமென்
றெல்லாப் பாடலும் எழும்பி ஒலித்தன
என்வாய் சிவசிவ என்று நாளும்
சொன்ன பயிற்சித் தொடர்பால் துதித்தது

பையிற் கையைப் படர விட்டு
மெய்யாம் நீற்றினை மிகுதியாய்ப் பூசி
ஐயனை மனத்துள் அடக்கமாய் வேண்டிக்
கனதி யானவென் கைப்பை பார்த்து
மனைவியை மகனை மனத்திரைக் கண்டேன்
நிலைகொள் ளாது நெளிந்த
குறைவெது மில்லைக் கூத்த னருளால்
திருமலைத் துறையைச் சேர்ந்து நிம்மதிப்
பெருமூச் செறிந்து பெரிதா யோரிர
வங்கே தங்கி அடுத்த காலை
பிங்கல னருளொடு பேருந் தினிலே
கொழும்பை நோக்கிய கொள்கையிற் பறந்தோம்

தலைநக ராங்கே தனிமையில் வாடிச்
சிலையென நின்ற சிவசே கரனை
விலைகொடு சிரிப்பு வெளிக்கநில் மைந்தனை
மலையென நம்பிய மகனைக் கண்டனன்
கலைந்த பொறுமை கண்ணீ ராகிக்
கரைத்துக் கவலையைக் கழுவிச் சென்றது
விரைவிற் பயணம் வேண்டிய செயும்படி
பணிப்பு வந்தது பதற்ற மடைந்தோம்
கணிப்பொடு காரியம் காரியப் படுதலை
மனத்துக் கொண்டோம் மதித்து நடந்தோம்
கனவிற் கூடக் கைவிட விரும்பா
மகனை மகிழ்வாய் அனுப்பி அவன்பதில்
ககன வழிவிற் காணலா மென்று
எதிர்பார்த் திங்கே ஏங்கி யிருந்தேன்
விதிசதி செய்த விளையாட் டயர்ந்தது
இருபத் தைந்தில் ராப்பதி னொன்று
எஸ்கியூ நானூற் றிரண்டெ னிலக்கம்
வருவான் எடுக்க வானூர் நிலையம்
கட்டு நாயக்க கருதுக வேண்டிய
மட்டுஞ் செய்தி மறையாய் வந்தது
செய்வ தறியா திருந்து தொழுதேன்

தெய்வம் போற்றிச் சீர்சால் சுன்னைக்
கதிர மலையுறை கண்ணுதற் கடவுளை
அங்கயற் கண்ணி யணைந்தருள் ஐயனை
எண்ணி யெண்ணிப் போற்றிப் போற்றி
நண்பர் தயவை நாடி வேண்டிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்கொடுத் தோற்பன இனிக்கச் செய்தேன்
கட்டு நாயக் காவை யணைந்து
முட்டா தெதிலும் முரணி லாவகை
ஏற்றுக் கொள்க இன்பம் பெறுக
என்பது நண்பர் ஏற்பா டதனால்
சென்ற மைந்தன் சேர்வெதிர் பார்த்தோம்

வெளிநாட் டிருந்து விரைபவர் போன்று
துளியுஞ் சலனத் தோற்றமே யின்றிச்
சிரித்து வந்த சிவசே கரனை
உரித்தொடு தழுவி யுவகையி லுறைந்து
கொழும்புக் குமரன் கழலிணை பணிந்து
தொழுது யாழ்நகர் தொடர வேண்டினன்

ஆங்கே
தரைவழி யில்லைத் தகும்வா னில்லைத்
திரைகடல் வழியும் திருப்தியா யில்லை
இந்நிலை செய்வ தேதென் றறியேன்
இங்கு மிடர்க்கோ ரெல்லையே யில்லை
கன்னற் கீதம் பயில்கரும் பிள்ளையே
என்னிலை யறிவாய் இரங்குவா யறிவேன்
நகல கிரியுள நம்பன் கோயில்
இடையே சுன்னையி லென்மனை சென்று
தடைப்பட் டிங்குயாம் தாமத மாகும்
விபரஞ் சொல்லுவாய் விளக்கமு மளிப்பாய்
சபலத் தழியும் தையலை யென்மகன்
அன்னையை அருந்ததி யனைய அமுதினை
கவின்நல மிழந்து கந்தனை வேண்டித்
தவிப்பாய்ச் செய்தித் தரவினை எதிர்ந்து
வழிபாட் டறையில் வள்ளி தேவா
எழிலுரு முருகன் எயிறொன் றுடையான்
சிவனுமை சேர்திருத் தெய்வசந் நிதியில்
சிவநினை வதனிடைத் தெருவினைப் பார்ப்பாள்

கார்நிறக் கருங்கற் கவினார் லிங்கத்
தூர்நல் என்நெய் உயிர்ப்புற நிவிப்
பார்க்கையிற் கருமைக் கவின்மினுக் கழகுறும்
அதனிடை நீற்றின் அடையா ளச்சிறப்
பிதந்தரு துல்லியத் தெழில்நலம் பேசும்
என்மனை யாளின் இனிய சிரிப்பு
பொன்னா யில்வகைப் பொலிவதைப் போற்றலாம்
கார்வண் ணத்துக் கருவண் டெனினும்
பார்வைக் குரியள் பரிவு பார்க்கலாம்
புனிதம் போற்றும் பூவாம் மெல்லியல்
குனிவு கொஞ்சங் குலவும் ஆனாற்
கூன லன்று கொள்கையிற் பணிவு
மானங் காக்க மந்த வண்ணச்
சேலை யணிவாள் சீவி விடாத
மேலைக் கேசம் மிகுதியும் அலையும்
குங்குமம் நெற்றியிற் கோலம் போடும்
நீற்றி னழகு நேர்த்தியா யொளிரும்
மாற்றத் துடனாய்ப் பார்த்திட அவளைச்
சுன்னைச் சந்தியிற் சுடலை நோக்கிப்
புன்னா லைக்கட் டுவனூர் செல்லும்
கிழக்கு நோக்கிக் கெழீஇய வீதியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களங்கொள் கதிரைச் சிவனார் கோயில்
கடந்து கிழக்கே கடந்த காலம்
தொடர்ந்து மக்களைச் சுமந்து செல்லும்
தொடர்வண் டித்தொடர் தொடரும் போக்கில்
தொடர்புறு மக்கள் தொற்றவு மிறங்கவும்
இறந்த காலத் தெந்த வேளையும்
பறக்கு மூரும் பாரஞ் சுமக்கும்
புகைவண் டித்தொடர்ப் போக்கையும் வரவையும்
வகைவகை யாகக் கண்டு களிக்கலாம்

இன்று
புதர்கள் மலிந்தும் புகலிட மாயும்,
அதனிலை மாறி அமைதி பேணும்!

● ● ●

**National** Car and Truck Rental
*When you're ready, we're ready.*™

தமிழில் சேவைக்கு
அழையுங்கள்



Earn Air Miles with Every Rental OR aeroplan Earn Aeroplan miles with Every Rental

**Vic Seevaratnam**
**416 882 5599**



**20 Continental Pl**
(Warden & Ellesmere)
**416-292-2919**

**5000 Sheppard Ave**
(Markham & Sheppard)
**416-291-5214**

**128 Richmond St. E**
(Richmond & Jarvis)
**416-364-4558**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை தமிழ்பேசும் மக்களின் செந்தமிழ் உரிமை! நம்மவர் உரிமை!

நல்லையா சண்முகப்பிரபு, நோர்வே

21

இயற்கையாலே விளைந்த துன்பம் தமிழர்க்கு சோதனைமேல் சோதனை!
எனினும் மனிதராலே வந்த துன்பம் தமிழர்க்கு வேதனையில் வேதனை!
செயற்கைவழிகள், புதியமுறைகள் மூலம்கண்ட வெற்றிகள் சாதனைமேல் சாதனை!
சேர்ந்து இயங்கமறுத்து தமக்குள் சண்டையிட்டு மடிந்தது வேதனையில் வேதனை!
மயக்கமுற்று தமிழர் எல்லாம் மல்லுக்கட்டிப் பிரிந்தமை சோதனைமேல் சோதனை!
மாறிமாறி ஒருவரைஒருவர் சுட்டு,வெட்டி,குத்திக்கொன்று மகிழ்ந்தமை வேதனை!வேதனை!
பயத்தில்பலரும்,கதைக்கமறந்து,மனதில்குமைந்து,கருத்து,பேச்சு,சுதந்திரம்இழந்ததுவேதனை
பண்புமறந்து பகைவர்போல ஒருவரைஒருவர் முறைத்துக்கொண்டது சோதனை!வேதனை!

போத்துக்கேயர்,ஒல்லாந்தர்,ஆங்கிலேயர்,பிரெஞ்சுக்காரர் ஆளவந்ததும் நமக்குச் சோதனை!
போர் புரிந்து தூக்கில் தொங்கி, எதிர்த்துத் தாக்கி புகழும் பெற்றது நம்மவர் சாதனை!
காத்திருந்த சதந்திரத் தமிழ் ஈழத்தைத் திருகி எடுத்துக்கொண்ட சிங்களரால் சோதனை!
கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்த தமிழர் மீது கட்டவிழ்த்த காடைத்தனம் வேதனை
நேத்துவந்த சிங்களவர் எம்மைச் சரிநிகராக எண்ணாதது மிக மிக வேதனை!வேதனை!
நேரியகொள்கையர்,இராமநாதன்,அருணா,செல்வா,பொன்னா,அமிர்,நவம்,சுந்தர்,பிரபா,சாதனை!
பார்த்துப் பார்த்துப் பூத்த கண்கள் பொறுமை காத்து பண்புகாத்து நின்றது வேதனை!
பண்புபேணி,பொறுமைகாத்தது போதும்!பொங்கிஎழு!விலங்குடைக்க!என்ற,தமிழ்வீரர்சாதனை!

சிங்களம் மட்டும் சட்டம் வந்ததால் தமிழர் வேலை இழந்தது சோதனை மேல் சோதனை!
செந்தமிழ்உரிமை நம்மவர் உரிமை! எனக்குமுறி எம்மவர் கிளர்ந்தெழுந்ததும் சாதனை!
சிங்களம்பேசியும்,மதம்மாறியும்,பெயர்மாற்றியும் தமிழர் வாழ்ந்ததும் வேதனைமேல்வேதனை!
செந்தமிழ்,சைவம்போற்றி,பாடசாலைகளமைத்த நாவலர்,இந்துசபை-இராசரத்தினம் சாதனை!
பங்கம்வந்தால் பயந்திரோம்!பாய்வோம் புலியாய்!எனப்பெரும்படை திரட்டியது சாதனை!
பண்பை மறந்தால் எம்மைக்கொல்லவரும் பசுவையும் கொல்லுவோம்! என்றது சோதனை!
அங்கம்அறுத்து, தாரில்எரித்து,கற்பைபறித்து,உயிரைஎடுத்து,உடமைஅழித்தது வேதனை!
ஆற்றல்,திறமை,உழைப்பு,வீரம்,புத்தி தமிழர்உடமை!என்று உலகுக்குஉரைத்தது சாதனை!

வட்டுக்கோட்டை மாநாடுதன்னில் தமீழீழம்அமைக்க கூட்டணிமுடிவு சாதனை!சாதனை!
வாலிபர் எல்லாம் அகிம்சைவழிபோதும்! ஆயுதம் ஒன்றே ஒரேவழி! என்றது சோதனை!
முட்டிமோதி தம்முள் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொன்றது!தமிழர்க்கு சோதனை!வேதனை!
முருகா! எமைக்காப்பாற்று!என முதியோர்,பெண்கள்,சிறார்கள் கேட்டது வேதனை!வேதனை!
தட்டிக்கேட்க தலைமைஎடுத்து, தமிழர்புலிப்படையை ஆக்கியதும் ஒருசாதனை!சாதனை!
தமக்குள் ஒற்றுமைமறந்து சிலதமிழர்இயக்கங்கள் சிங்களர்பக்கம் சேர்ந்தது வேதனை!
வெட்டமுடியா தரைப்படை,கடல்படை,வான்படை,உளவுபடை தலைவன் சாதனை!சாதனை!
வேங்கையாய் பாய்ந்து நடுநிசிதன்னில் சிங்களபடைமுகாம் அழித்ததும் சாதனை!சாதனை!

சமாதானம்,நீதி கிடைக்க,உலகசமூகஉதவி, இராசதந்திரம் தேவை என்றது சாதனை!
சகலரும்ஏற்கும் நோர்வேயை நடுவராகக்கொண்டுவந்தது தமிழ்அகதியரெம் சாதனை!
அமைதி,நீதி,உதவிவேண்டி அரசகம்முன்பாய் ஆவணி-90ல் உண்ணாவிரதித்து மனுதந்து
அன்பாய்,ஆர்வமாய்,அமைச்சர்கள்,பிரதமர்கள் பலருக்கும் எடுத்துரைத்தமை சாதனை!
எமையிங்கு தங்கவிடும்!எம்மவர்க்கு சிறை,சித்ரவதை,செல்லடி,குண்டு சோதனை!சோதனை!
எனக்கேட்டு,இங்குகாலூன்றி எம்மக்கள்விடிவுபெற,அமைதிபெற நாம்உழைத்தமை சாதனை!
சமாதானப்பேச்சு, அமைதிதீர்வு நன்று! யுத்தத்தால் பல்லாயிரம் ஏழையர்இறப்பு வேதனை!
சுதந்திரம்,சமத்துவம்,வடகிழக்கில்தன்னாட்சி,எனகேட்டுசமாதானதூதர்பெற்றதும் சாதனையே!

• • •



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பங்குபற்றி சிறப்பித்த மாண்புமிகு கவிஞர்கள்:

| | | |
|---|---|---|
| 01. | கி.பாக்கியலட்சுமி-(முதல்பரிசு:10000ரூபா) | அன்புஇல்லம், திருகோணமலை |
| 02. | அ.ஜெயபாரதி-(2ம் பரிசு: 7000ரூபா) | செங்கலடி, மட்டக்களப்பு |
| 03. | ம.கொன்சலிற்றா-(3ம்பரிசு: 5000ரூபா) | ஆட்காட்டிவெளி, மன்னார் |
| 04. | பாத்திமா ஜசீலா நிலாம் | அக்குரணை, கண்டி,மலையகம் |
| 05. | மோகனதாஸ் குமுதரஞ்சனி | மடுல்சீமை, பதுளை,மலையகம் |
| 06. | தருமரத்தினம் மதியழகன் | இறம்பைக்குளம், வவுனியா |
| 07. | மயுதினி வெற்றிவேலு | தெகிவளை, கொழும்பு |
| 08. | மாரிமுத்து சிவகுமார் | அட்டன், மலையகம் |
| 09. | பா.இந்திரசர்மா | நீர்கொழும்பு |
| 10. | அ.உலகவதி | கொழும்பு-13 |
| 11. | ஏ.நஸ்புல்லா | கிண்ணியா, திருகோணமலை |
| 12. | நா.வேலுப்பிள்ளை | கொழும்பு |
| 13. | சி.என்.துரைராஜா | திருகோணமலை |
| 14. | ஏ.கலைச்செல்வி | கம்பர்மலை |
| 15. | ச.இ.ஐங்கரலிங்கம் | கரும்பனிச்சங்குளம், வவுனியா |
| 16. | திருமதி ஆர்.அப்புத்துரை | கொழும்பு 13 |
| 17. | மரியநாயகம் டொறின் | நாச்சிக்குடா |
| 18. | சோ.மோகன்ராஜ் | புனே, மும்பாய், இந்தியா |
| 19. | எஸ்.சுப்பையா | தாராவி, மும்பாய் இந்தியா |
| 20. | எஸ்.அப்புத்துரை | கொழும்பு-13 |
| 21. | நல்லையா சண்முகப்பிரபு | திறம்மன், நோர்வே |

**1.ம்,2.ம்,3.ம் பரிசுஅளித்து சிறப்பிப்பு: திறம்மன் தமிழர்நட்புறவுக்கழகம்,**

**pb.2085,strømsø, 3003 Drammen, Norway**

**N.S.PIRABU,Editor/SARVADESA TAMILER/Poem Collections Special**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*தொகுப்பு ஆசிரியர் பற்றி...*

தற்போது நோர்வேயில் வசிக்கும் இணுவிலைச்சார்ந்த சண்முகப்பிரபு பேராதனை பல்கலைக்கழக பட்டதாரி. பேராதனை தமிழ்ச்சங்கச் செயலாளராகவும் மதுரம் இதழ் நிறுவனர் / ஆசிரியராகவும் பணிபுரிந்தவர். நோர்வே சர்வதேச தமிழர் இதழை உலகத் தமிழருக்காக நடாத்தி அவர்களின் முன்னேற்றம், ஐக்கியம் கருதி ஒன்றிணைத்தவர். நோர்வேயில் றிம்மன் தமிழர் நட்புறவுக்கழகம், றிம்மன் இந்து கலாச்சார மன்றம் நிறுவி தமிழ், சைவம் வளர்த்தவர். நோர்வே அரசு ஈழத்தமிழர் பிரச்சினையில் தலையிட்டு விசேட தூதரை அனுப்பக் கோரி பிரமர்கள், அமைச்சரிடம் வேண்டுதல் விடுத்தவர்.

இலங்கையின் தமிழ் பேசும் மக்களின் சோதனை, வேதனை, சாதனை பற்றி (1948 - 2005) ஒரு வரலாற்றுப் பதிவாக இந்த கவிதைத் தொகுப்பை தமிழ் உலகத்திற்கு தந்துள்ளார்.

**PRINTED BY N.SHANMUGAPPIRABU, PUBLISHED BY INUVIL THIRUVOOR ONTRIAM**

Graphic Land 647 219 7576

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org